1268

ஜகன்மோகினி

ஆசிரியை

வை.மு.கோதைநாயகி அம்மாள்

1268

JL
M122JM.
N36.13.2
182984

ன்மோகினி" ஆபிஸ்
2௭, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

மலர் 13
இதழ் 2

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	2	0
சாருலோசனா (2 பாகங்கள்)	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணிகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கொடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பங்கஜமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுணபூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபால் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

6-வது அதிகாரம்

அன்பின் அருணோதயம்—அன்பர்களின் இன்ப இதயம்

உலகத்தில், மக்கள் தாம் அறிந்தோ, அறியாமலோ தவறு செய்திருந்தாலும் அதைப் பிறர் எடுத்துக் கூறும்போதுதான் தம்மை யறியாது வேதனை செய்து மனத்தை வருத்தி வாட்டுவது சகஜம். தெரிந்து குற்றம் செய்தவர்களுக்குக்கூட "ஐயோ! ஏன் இப்படிச் செய்தோம்?" என்று தபிக்கச் செய்யும்.

நமது பத்மநாபனின் நிலைமையைக் கூறவேண்டுமா! தன்னையே ஈட்டியினால் குத்துவதுபோன்று பரம சங்கடம் செய்கின்றது. சாப்பாட்டைத் தொடவும் பிடிக்கவில்லை. ரங்கநாதனும் சுகந்தாவும் இது விஷயமாகச் சொல்லச் சொல்ல ஜானகியின் பரிதாபகரமான உருவமும், அவள் பாடிய பாட்டின் இனிமையும், அர்த்தமும் அவன் கண் முன்பு தாண்டவமாடத் தொடங்கி அது வேறு இடித்துக் காட்டுவது போலச் சித்திரவதை செய்கிறது.

ரங்க:—ஏன் சுகந்தா! நான் அந்த பெண்ணைப் பார்த்திருக்கிறேனா?

சுகந்:—நீங்கள் பார்த்ததே கிடையாது. நீங்கள் இருக்கையில் அவள் வீட்டை விட்டு வெளியில் வந்தால் அல்லவா பார்க்கமுடியும்? நான் இன்று எத்தனையோ தொந்தரவு செய்து அழைத்து வந்ததால் என் வார்த்தைக்குத் தட்டாமல் வந்தாள் பாவம். மூத்த பெண்ணின் கதி இப்படியாகிவிட்ட ஏக்கத்தினால் அந்த அம்மாளுக்கு தேகசுகமே கெட்டு விட்டதாம். அவளும் துரும்பாக மெலிந்து நோயாளி போலாகி விட்டாள் பாவம். இம்மாதிரி ஒரு பெண்ணை

யும் குடும்பத்தையும் நாசம் செய்யும் பேய்கள் என்ன கதியைத்தான் அடைவார்களோ!

ரங்க:—கதியா! என்னைக் கேட்டால், இப்படி சற்றும் கூசாமல் பணங் கேட்ட வாயில்......ஐயோ...பத்மநாபா! மன்னிக்கவேண்டும். ...உன் பெற்றோர்களும் இக் கோஷ்டியில் முதல் நம்பராகையினால் உனக்குக் கோபம் வரலாம்...என்னதான் இருப்பினும் இச் செய்கையை ஆதரிக்காதவர்கள் வெறுக்காமலிருக்கமுடியாது...ஏண்டா! ...சாதம் இலையில் அப்படியே இருக்கிறதே! ஏன் சாப்பிடவில்லை... என்றான்.

பத்ம:—ரங்கநாதா! என்னை மன்னிக்கவேண்டும். எனக்குப் பசியே இல்லை. மத்தியானம் பலகாரம் சாப்பிட்டதே இன்னும் ஜீரணமாகவில்லை. ஆகையினால் நான் எழுந்துவிடுகிறேன்—என்று கூறிக்கொண்டே எழுந்துவிட்டான். ரங்கநாதனும் தொந்தரவு செய்யாமல் எழுந்துவிட்டான்.

வழக்கம் போல வெத்திலை பாக்குத் தட்டை சுகந்தா கொண்டு வைத்துவிட்டுச் சென்றாள். பத்மநாபனுக்குள்ள மன வேதனையில் வெற்றிலைப் பாக்கு போடவும் பிடிக்கவில்லை. ஒரு நாளுமில்லாது இன்றுள்ள புதிய மாறுதலைக் கண்ட ரங்கநாதன் தானும் தன் மனைவியும் வரதகுணியைப் பற்றிப் பேசியதால்தான் இவனுக்கு வருத்தமுண்டாகிவிட்டது என்று தெரிந்துகொண்டு நாம் ஏன் இம்மாதிரி சொன்னோம் என்று வருத்தமுற்றவாறு பத்மநாபனைக் கவனித்தான்.

பத்மநாபன் சாய்வான நாற்காலியில் படுத்துக்கொண்டு இன்னதென்று பேசவும் முடியாது, தன் உண்மையைச் சொல்லவும் மாட்டாது தத்தளிக்கின்றான். தனது மாறுதலைத் தன் நண்பன் கண்டு என்ன நினைப்பானோ என்றும் தோன்றுகிறது. சுகந்தவல்லி சொல்லிய வார்த்தைகள் மனத்தில் கூரிய ஈட்டிபோல் பாய்ந்து குத்துகின்றன. 'அந்தப் பெண் விதவையாக விருந்தாலும் நிம்மதியாயிற்றே! அவள் புருஷன் நல்ல செக்குலக்கையைப் போல இருக்கி

றான்' என்று சொல்லிய வார்த்தைகளை அவனால் மறக்கவே முடியவில்லை.

இப்படிப்பட்ட வசை தன்னைச் சூழ்ந்திருக்கிற தென்பதை இதுகாறும் கவனியாது இருந்துவிட்டதை எண்ணி ஏங்குகிறான். தன் தாய் தந்தையரின் கொடிய செய்கையும் கடின இதயமும் வெட்டவெளியாக இப்போதுதான் தெரிகிறது. தெரிந்தும் என்ன செய்வது. அவர்களை விரோதம் செய்துகொண்டால் நன்றாக இருக்குமா என்ற அச்சமும் கூடவே வதைக்கின்றது.

ரங்க:—பத்மநாபா! நீ என்னை விட வயதில் சிறியவனாக விருந்த போதிலும் நீ என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். உன்னை சந்தோஷமாக விருப்பதற்கு அழைத்துக்கொண்டு வந்தேனே யன்றி வருத்தமுறச் செய்வதற்கு அல்ல. ஏதோ ஒரு வார்த்தை வந்ததால் அதைப்பற்றி சொல்லிவிட்டேன். உன் பெற்றோரின் செய்கையை நான் மட்டுமல்ல, உலகமே இவ்விதந்தான் பழித்து மிகவும் இழிவாகக் கூறுகிறது. உலகத்தின் வாயை மூட முடியுமா! ஆனால் உன் பெற்றோரைச் சொன்னால் உனக்கு கோபம் வருவது ஒரு சிறிது இயல்புதான். நீ நல்ல புத்திசாலி; படித்த அறிவாளி என்பதை நானறிவேன். ஆகையினால் அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. இந்த பெண்ணைக் கண்ணால் பார்த்ததினால் பார்ப்பவர்களுக் கெல்லாம் மனம் தவிக்கின்றது. அதே போலல்லவா உன் மனைவியும் தவிப்பாள். பெண் வதை என்பது இலேசானதா! அதை நினைக்கும் போது உண்மையில் எனக்கு வெறுப்பாகிவிட்டது; நான் சொல்லிவிட்டேன்.

182984

நண்பா! என்னுடைய சொந்த மாமன் மகளை நாங்கள் இந்த வரதக்ஷிணை என்ற அரக்கனுக்குப் பலியிட்டவர்கள். ஆகையினால் ஆத்திரம் கட்டு மீறி வந்துவிடுகிறது. அந்த கதையையும் சொல்கிறேன் கேள்.

என் மாமாவுக்கு மூன்று பெண்கள். பெரிய பெண்ணை தக்க இடத்தில் மணம் செய்விக்க எண்ணி சம்மந்திகளின்

யோக்யதையை அறியாமல் சேற்றில் காலை வைத்ததுபோல வைத்து விட்டார்.

வரதக்ஷிணை முதலில் ஒரு ஆயிரந்தான் கேட்டார்கள். கொடுத்து விவாகம் செய்தாயிற்று. பெண்ணை யழைப்பதற்கு மூவாயிரம் ரொக்கம் கேட்டார்கள். என் மாமா கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் 2 வருட காலம் பெண் வாழாமல் தள்ளி வைக்கப் பட்டிருந்தாள். பெண்ணோ மகா புத்திசாலி. மகா மானி. "நான் எக்கதியானாலும் மாமியார் வீட்டிலேயே போய் அனுபவிக்கின்றேன். என்னைக் கொண்டு விட்டுவிடுங்கள்" என்று பிடிவாதம் செய்தாள்

மாமாவும் ஒரு தினம் பெண்ணை திடீரென்று அவர்கள் வீட்டில் கொண்டு போய் விட்டு வந்துவிட்டார். பெண்ணை அடித்துத் துரத்த அவர்களும் எத்தனை ப்ரயத்தனம் செய்தும் பலிக்கவில்லை. பெண்ணோ நான் கூலி வேலைக்காரியைப் போலவாவது உங்கள் வீட்டிலேயே இருக்கிறேன். நான் போகமாட்டேனென்று பிடிவாதமாக ஓர் ஊழியக்காரியைப் போலவே உழைத்து வந்தாள்.

அவளைச் சித்திரவதை செய்து அவஸ்தைப் படுத்தினார்கள். பெண் லக்ஷ்யம் செய்யாது பொறுமையோடு விதியை எண்ணி இருந்தாள். வீட்டிலேயே ஒரு பெண் வாழாம லிருக்கையில் வேறு பெண் கொடுக்க மறுத்தார்கள். அதனால் அந்தப் பெண்ணைச் சிலரிடம் வேலைக்காரி என்றும், சிலரிடம் தம் உறவினரின் பெண் திக்கில்லாத ஏழையாகையால் சோற்றுக்காக இங்கிருப்பதாயும் பலவிதமாகப் பொய் சொல்லிப் பார்த்தார்கள். அதுவும் பலிக்கவில்லை.

பையனோ முண்டத்திலும்முண்டம். அவனை ஒரு வேலையைச் சாக்கிட்டு கிராமத்தை விட்டு வெளியில் அனுப்பிவிட்டார்கள். இந்த பெண்ணிருந்தால் வேறு கல்யாணத்திற்கு தடங்கலாக விருக்கிறதால் இவளை எப்படியாவது ஒழித்துவிட எண்ணி சற்றும் அஞ்சாமல் கையும் மெய்யும் மனமும் துணிந்து அப்பெண்ணை நெருப்புப் போட்டுக் கொளுத்திவிட்டார்கள்.

எவ்விதமாகவாவது தான் இறந்தால் போதும் என்கிற எண்ணமே அப் பெண்ணுக்கிருந்ததால் அவள் சந்தோஷமே கொண்டாளாம். தீ புடவையில் பிடித்துக்கொண்டு திகுதிகென்று எரியும் போது எரிச்சல் தாங்காமல் கூச்சலிட்டாளாம். அந்த கூச்சலை அண்டை அயல் வீட்டினர் கேட்டு ஓடிவந்து பார்க்கையில் எரிந்து கொண்டிருக்கிறுளாம்.

அவர்கள் வந்து குய்யோ முறையோ என்று கத்தும் போதுதான் அவ் வீட்டுக்காரர்களும் கவனித்தது போலப் பாசாங்கு செய்து "ஐயோ! அம்மா! இதென்னடீ அனியாயம்! எப்படியடீ தீ பிடித்தது. உடம்பில் ஜாக்ரதை இல்லையா?" என்று கத்தி லபோ திபோ என்று அடித்துக் கொண்டார்களாம்.

இதற்குள் பெண்ணின் தேகமே பாதி பொசுங்கிவிட்டது. எல்லோரும் தண்ணீர் கொட்டி அணைத்து உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனர்கள். அண்டைவீட்டுக்காரர் என் மாமாவுக்குத் தந்தி யடித்தாராம். அவர்கள் அலறி யடித்துக்கொண்டு ஓடினர்கள். பெண் ஆஸ்பத்திரியில் ப்ரக்ஞையற்றுக் கிடந்தாள். என் மாமாவும் மாமியும் முட்டிக்கொண்டார்கள். இது வேண்டும் என்று கொளுத்திவிட்டதுதான் தானுகப் பற்றவில்லை என்று அவர்கள் அறிந்து கொண்டு வயிறெரிந்து கூச்சலிட்டார்கள். சமையல் செய்யும் பொழுது அடுப்பில் தீப்பிடித்துவிட்டதாக அவர்கள் ஜோடித்து அதற்குத் தக்கபடி சிலருக்கு லஞ்சத்தைக் கொடுத்து பக்குவப் படுத்தி விட்டார்களாம்.

அதற்குமேல் என்ன இருக்கிறது. மூன்று நாள் ரணஜன்னியுடன் அவஸ்தைப்பட்டு நான்காம் நாள் உலகைவிட்டு மறைந்தாள். இந்த அக்ரமத்தை மனம் துணிந்து செய்துவிட்டதினுலேயே அவர்களுக்கு சந்தோஷமும் மனச்சாந்தியும் ஏற்பட்டு விட்டதா? கலிகாலத்துக் கடவுள் கண்மூடியல்ல. அவன் உலகத்தையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறுன் என்பதை மறந்து விட்டார்கள்.

இந்தப்பெண்ணிடம் சேரவிடாது தடுக்கும்பொருட்டே, அவனை வெளியூருக்கு அனுப்பியிருந்ததால் பையன் வெளியூரில்

குடி இருந்த வீட்டுப் பெண்ணைக் கைப்பிடித்து விட்டான். அப் பெண்ணின் பெற்றோர்கள் இதையறிந்து தங்கள் மகளை மோசம் செய்து கெடுத்து விட்டதாக அவனைத்தக்க சாக்ஷியுடன் அவன்மீது பெரிய கேஸ் போட்டு அவனைச் சந்நியில் இழுத்துவிட்டதில் சட்டப்படிக்குப் பையன் கடுந்தண்டனை யடைந்து இன்னமும் சிறையில் கிடக்கிறான். அந்த அவமானத்தின் கொடுமையினால் குடும்பம் சிதறிப்போய்விட்டது.

பத்மநாபா! பாழும் வரதக்ஷிணை என்ற கிராதக அரக்கன் மூலம் எத்தனை ஆபத்துக்கள் சமுகத்தில் விளைகின்றன பார்த்தாயா! நாம் கண் முன்பு பார்க்கும் சிலவற்றை அறிகிறோம். பார்க்காதவை இன்னும் எத்தனை இருக்கின்றனவோ! யார் அறிவார்கள். இத் தகைய ஊழலை-கொடிய தொத்து வியாதியை-வளர்ப்பது எத்தகைய பாதகம் பார். ஐயோ பாவம்! இம்மாதிரி இம்சைகளை அனு பவிக்கும் மனிதர்களின் உள்ளம் எப்படித்தானிருக்கும் என்பதை நினைக்கையில் நான் ஆத்திரத்தினால் சொல்லிவிட்டேன். நீ இதை மறந்துவிடு....

என்று முடிப்பதற்குள் பத்மநாபனுக்கு இன்னும் மனம் குழம்பிப்போய் துக்கம் தாங்கமாட்டாது, திணறிக்கொண்டுவந்து விட்டது. கண்களில் ஜலம் வழிகின்றது. முகத்தை மூடிக்கொண்டு "ரங்கு! நான் பதில் பேசவில்லை என்று என்னைக் கோபிக்காதே! என்னை மன்னித்து இம்மட்டும் விட்டுவிடு, பிறகு பேசுகிறேன்" என்று கூறிவிட்டான். ரங்கனுக்கு அவனது ரகஸியம் தெரியாதாகை யினால் தான் சொல்வது அவன் மனத்தில் பொத்தி வித்தியாசமாகக் கோபம் வந்து விட்டதாக எண்ணிவிட்டான். அவனை தொந்தரை செய்யவும் மனம் வரவில்லை அவன் இஷ்டப்படியே விட்டு விட்டான்.

பத்மநாபன் தனக்குக் கொடுத்துள்ள படுக்கையில் படுத்துக் கொண்டான். ரங்கனும் தன்னறைக்குப்போய் விட்டான். சுகந்தா வும், ரங்கனும் பத்மநாபனுக்கு மனவருத்தம் ஏற்பட்டு விட்டதை எண்ணி வருந்தி அது விஷயமாகவே பேசிக்கொண்டிருந்தார்கள்.

பத்மநாபனுக்குள்ள மனக்கலக்கத்தினால் புரளுகிறான். தூக்கம் பிடிக்காமல் தத்தளிக்கிறான். மனம் எண்ணாததும் எண்ணிப் புண்ணாகித் தவிப்பதால் பித்துப் பிடித்தவன்போலாகி விட்டான்.

ஒருபுறம் ஜானகியின் அதிமதுரமான கானமும், சோகமும், பரிதாபமும் நிறைந்த பார்வையுடைய முகம் கண்ணீர் பெருகியவாறு நிற்கின்றது. மற்றொரு புறம் தன் பெற்றோர்களின் முகங்கள் தோன்றி அவனை மிரட்டுகின்றன. இரு காட்சிகளும் அவன் எதிரில் சினிமாப் படம்போலத் தாண்டவம் செய்கின்றன. "மீண்டும் இப்பக்கம் திரும்பினால் பெற்றோருக்கு விரோதியாக நேரும்; அப்பக்கம் சாய்ந்தால் அக்கினி சாக்ஷியாக மணந்த தர்ம பத்தினிக்கு கொடிய த்ரோகம் செய்த பாதகம் ஏற்படும். என்ன செய்வது?" என்கிற பழய கலக்கம் அவனைச் சுற்றிக்கொண்டது.

இரவு மெல்ல நடப்பது போல அவனுக்குத் தோன்றுவதால் பெரு மூச்சுவிட்டுப் புரளுகிறான். மணியைப் பார்த்தால் 11 தான் ஆகி இருந்தது. "சீச்சீ! இப்போதுதானா 11 ஆகிறது". என்று எழுந்து உட்கார்ந்தான். அவனுக்குப் படுக்கைக்கென கொடுத்திருந்த விடுதி சுகந்தவல்லியின் தனியறை. அவ்வறையில் உட்கார்ந்து தான் அவள் தையல் வேலைகள், பிரம்பு வேலைகள் முதலியன செய்வது வழக்கம். ஆகையினால் பிரம்புகள், அவை முடையும் ஊசி முதலிய ஆயுதங்கள், நூல்கள் எல்லாம் அங்குள்ள ஓர் திறந்த அலமாரியில் வைக்கப் பட்டிருந்தன.

அதற்கடுத்த ஷேல்பில் சில புத்தகங்கள் இருப்பதைக் கண்ட பத்மநாபன் அவைகளில் எதையாவது ஒன்றை எடுத்து வாசிக்கலாம் என்று எண்ணிப் பார்க்கையில் சில ஆங்கில நாவல்கள், மாத சஞ்சிகைகள், தமிழ் நாவல்கள் முறையே;வரிசையாக அடுக்கி இருந்தன. அவைகளில் ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினான்.

அப் புத்தகத்திலிருந்து ஒரு கடிதம் தபீரென்று விழுந்தது. அக் கடிதம் புத்தகத்தின் பக்க அடையாளத்திற்காக வைக்கப்பட்டிருப்பதாக எண்ணி அதைப் பார்த்தான். அதில் முதல் வரி "சுகந்தத்திற்கு ஜானகி எழுதிக்கொண்டது' என்று வரைந்திருப்பதைப்

பார்த்ததும், பத்மநாபனுக்கு இது தன் மனைவி எழுதிய கடிதந்தான் என்பது நன்றாக விளங்கிவிட்டதாகையினால் அது பிறருக்கு வந்த கடிதமென்பதைக் கூட மறந்து படிக்கத் தொடங்கினான்.

" பிரிய சுகந்தத்திற்கு ஜானகி எழுதியது.

உன் கடிதங் கண்டேன். நீ என்னை மன்னிக்கவேண்டும்.

இதுபரியந்தம் என் பிதாவை எத்தனையோ ஊர்களுக்கு மாற்றி இருந்தும், இவ்வூரில் வந்த 2 மாதத்திற்குள்ளாக அத்தன் அருளினால் உத்தம சிகாமணியாகிய உன் சினேகம் கிடைத்தது போன்று எங்குமே கிடைத்ததில்லை. நான் மலைக் குவியல்கள் போல் பாபத்தைச் செய்திருப்பினும் ஓர் அணு வளவு புண்ணியம் செய்துதான் உன் சினேகத்தைப் பெற்றி ருக்கிறேன்.

சகோதரி! என்னுடைய கேவலமான பிறவியின் கோரம் முற்றும் நீ அறிந்ததே யாகும். உனக்கு புதிதாகச் சொல்ல வேண்டுவதே இல்லை. என் மனத்திற்குள் நான் படுந் துயரத் தையும் என்னுயிரிடத்திலேயே நான் கொண்டுள்ள வெறுப்பை யும் அந்த எல்லாம் வல்ல சர்வேசந்தான் அறிவான்.

நான் விதியை எண்ணி வீட்டுடன் அடைபட்டுக் கிடப் பது உன் போன்றவர்களுக்கு நன்கு தெரிந்ததே: அங்ஙன மிருக்க, நான் கண்டபடி கண்ட மனிதருடன் திரிவதாயும்... ராமா! ராமா!...வாயிலேயே வைத்துப் பேசக்கூடாத விதமாக நான் நடந்துகொள்வதாயும்,முந்தின நாள் என் மாமியார் வீட் டாரிடமிருந்து எங்களுக்கு மிகவும் வேண்டியவர்களுக்குச் செய்தி வந்திருக்கிறதாம்...

ப்ரிய சகி! இதுவும் நான் செய்த பாபமல்லவா! இவை எல்லாம் கடவுளின் சோதனை போலும். என் கதி இங்ஙன மிருக்க நீ யழைக்கும் பிக்னிக்கு பார்ட்டிதானா எனக்குக் குறைவு. அம்மாதிரி சந்தோஷப் படுவதற்கெல்லாம் நான்

பெண் பிறக்கவில்லே. அப்படி சந்தோஷப்படப் பிறந்திருந்தால் ஓர் ஏழைக் குடியானவன் வயிற்றில் பிறந்திருப்பேன்; அல்லது வாழ்க்கைப் பட்டிருப்பேன். பாழும் பணம்...பணம்... என்னும் கொடிய சுழல் காற்றில் அகப்பட்டுக்கொண்டு அல்லல் படமாட்டேன்.

மண வாழ்க்கை என்னும் இன்பக் கடலில் இனிது திளேத்து அந்த ஆநந்தத்தை யனுபவிக்கக் கடவுள் மக்களுக்கு மார்க்கத்தை நீதி முறையிலும்,உத்தமமான வழியிலும் காட்டினர். ஆனல் மக்கள் அதன் உண்மை தத்துவத்தின் மகிமையை அறியாது ஆசை என்னும் பேயை ஏவி, வரதக்ஷிணே என்கிற திமிங்கிலத்தையும், சீர் வகைகள் என்கிற முதலே, ஆமை, பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களேயும் அப் புனிதமான கடலில் நிரப்பிவிட்டதால் மக்களின் மனக் களிப்பை அவைகள் தடுத்து நாசம் செய்துப் பிரித்து விடுகின்றன.

சுகந்தா! நீ நல்ல படித்த அறிவாளி; புத்திசாலி. உன்னிடம் நான் ஏதோ அளக்கிறேன்...என் மனக் கொதிப்பின் வேகததினல் நான் ஆப்த சிநேகிதையாகிய உன்னிடம் கூறிவிட்டேன். நான் வரக்கூடிய நிலேமையில் இல்லே என்பதை நீயே அறிந்து என்னே மன்னிப்பாயாக. ஆண்டவன் கிருபையினல் நீங்கள் சந்தோஷமாகச் சென்று வாருங்கள். மகா பாவி என்னே மனத்திலும் நினேயாதே! கூடிய விரைவில் என் கஷ்டம் நிவர்த்தியாகி, ஒன்று உலகத்தவரைப் போல வாழவேண்டும்; அல்லது காலனிடம் சென்று களிக்கவேண்டும். இவ்விரண்டில் பிந்தியதுதான் எனக்கு நிச்சயமென்று தோன்றுகின்றது......

இங்ஙனம்
உன் பிரிய சிநேகிதை
ஜானகி.''

என்பதைப் படிக்கும்போதே ஏற்கெனவே கொந்தளிக்கும் பத்மநாபனின் உள்ளம் பின்னும் பதின்மடங்கு அதிகரித்து வேதனே செய்தது. அக் கடிதம் பிறருக்கு வந்ததென்பதை அடியோடு

மறந்து அதைப் பலதரம் படித்தான். பின்னும் ஏதேனும் கடிதங் கிடைக்குமோ வென்று புத்தகத்தைக் கிளறிப் பார்த்தான்.

பத்மநாபனின் அறையில் விளக்கு எரிவதும்,ஏதோ சிறிது ஓசை கேட்பதும் ரங்கநாதனுக்கும் சுகந்தவல்லிக்கும் தெரியாமலிருக்க முடியுமா? பத்மநாபனின் உண்மை விஷயங்கள் தெரியாமையினுல் தாங்கள் சொல்லியதற்கு அவன் கோபித்துக் கொண்டிருப்பதாக ஏற்கெனவே எண்ணி இருந்ததால், இப்போது தூங்காமல் என்ன செய்கிருன் என்கிற சந்தேகம் உண்டாகியது. உடனே இருவரும் எழுந்து வந்து ஜன்னல் புறமாக உள்ளே எட்டிப் பார்த்தார்கள்.

உள்ளே விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. ஆனுல் பத்மநாபனைக் காணவில்லை. ஒரு வேளை குழாய்ப் பக்கம் சென்றிருக்கிருனே என்று பார்த்தார்கள். அங்கும் காணப்படாமையினுல் உள்ளேயே சென்று பார்க்கையில் அவ்வறைக்கு வீதிப் புறமுள்ள கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றிருப்பதையறிந்தார்கள். இந்த இராக் காலத்தில் முன் பின்னறியாத புதிய ஊரில் எங்கு சென்றிருப்பான். நாம் சகஜமாகப் பேசிய வார்த்தைகளுக்குக் கோபித்துக்கொண்டுதான் சொல்லாமல் போய்விட்டானே! வெகு சினேகிதமாக அழைத்து வந்து இப்படி அவமானம் செய்து துரத்திவிட்டார்கள் என்று எண்ணிக் கொண்டானே! அவன் ஊருக்கே போயிருப்பானே!...அவன் பெற்றோர்கள் என்ன எண்ணுவார்களோ! என்ன திட்டுவார்களோ! இந்த நடுநிசியில் எங்கு தேடிச் செல்வது?'' என்று பலவிதமாக எண்ணி குழம்பிப் போய்விட்டார்கள்.

வெளியான ஒரு மாதத்திற்குள் ஏராளமான காபிகள் செலவாவதிலிருந்தே, அம்ருததாரா அல்லது அதிசய சம்பவம் எனும் நாவலின் மேன்மை விளங்கவில்லையா?

விலை அணு நான்குதான்

உடனே வாங்க முந்துங்கள்.

7-வது அதிகாரம்

மூர்க்கருடன் வாழ்க்கை முள்ளினும் கொடிதே

உலகத்தில் மக்களுக்கு அதிகமான ஆத்திரம் உண்டாகிவிடினும் அடக்குவது கஷ்டம்; சந்தோஷம் தோன்றினாலும் அதையும் சமாளிப்பது அரிது. இரண்டும் எல்லை மீறிப் பொங்கி எழுந்து பின்பே அடங்குவது இயல்பு. நமது நாராயணன் கையில் அகப்பட்ட கட்டையை எடுத்துக்கொண்டு ஓட்ட ஓட்டமாக ஓடி வருவதைக் கண்ட சீதா "ஐயையோ! ஐயயோ! கொலை! கொலை! கொலை பண்ண வரானே:... என்று பிரம்மாண்டமாகக் கத்திக் கூச்சலிட்டபடியே சமையல் கட்டை நோக்கி ஓடினாள்.

நாராயணனும் தலை கால் தெரியாமல் ஓடுகையில் சந்திரா வெகு தைரியமாயும், சாமர்த்தியமாயும் எதிரே சென்று நாராயணனின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "அப்பா! அப்பா! பொறுங்கள்: பொறுங்கள்:...ஆறுவது சினம் என்ற ஔவையின் வாக்கை மறந்து விட்டீர்களா! அம்மா கேவலம் புத்தி கெட்ட ஜடம் என்று உங்களுக்குத் தெரியாதா! அவளை அடிக்கச் சென்றால் இன்னும் ஆபத்தும் ரகளையும் விளையுமே யன்றி நன்மை யுண்டாகுமா! தெரிந்தவர்களுக்கு ஒரு வார்த்தை சொன்னாலும் போதும். அறியாமையே உருக்கொண்ட என் தாயிடம் நீங்கள் இனி எது செய்தும் பலன் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதோ! வீணாக இன்னும் அபவாதத்தைத் தேடிக்கொள்ளவேண்டாம்." என்று வெகு உருக்கமாயும், கண்ணீர் வழிந்துகொண்டும் கூறினாள்.

சந்திராவின் தங்கை இந்திராவும் மகா புத்திசாலி யாகையினால் தன் தாயாரிடம் சென்று வாயை இழுத்துப் பொத்திக் கூச்சலிடாத

வாறு தடுத்து அவளைச் சமாதானம் செய்யத் தொடங்கினாள். நாராயணன்என்ன செய்வான் பாவம்.பெண்ணை திமிரிக்கொண்டு ஓடவும் துணிந்தான். ஆனால் ஆத்திரத்தில் அடித்துவிட்டால் அதுவும் ஒரு அபவாதந்தானே, இன்னும் ரஸாபாஸமாகவன்றோ ஆய்விடும் என்றும் எண்ணினான். தன் விதியை நினைத்து அபரிமிதமான வருத்தத்துடன் கையிலிருந்த கட்டையை வீசி எறிந்துவிட்டு சங்கிராவையும் உதைத்துத் தள்ளிக்கொண்டு கூடத்திற்கு வந்து உட்கார்ந்தான்.

மனமோ கட்டுக் கடங்காத விசனத்தால் கொந்தளிக்கின்றது. ஈசன் தனக்கு வறுமையையும் கொடுத்ததுடன் மூர்க்க மனைவியையும், ஏராளமான குழந்தைகளையும் கொடுத்து சோதிக்க வேண்டுமென்று சீற்றம் கொண்டானே!...என்று கண்ணீர் உதிர்த்தான்.

ஊஹம்...கையில் காசு இருக்குமாயின் மனிதன் உலகில் ஒரு விதமாக உலாவலாம். இல்லையேல் கேவலம் செத்த எலியைக் காக்கை கொத்துவது போலக் கொத்தி நார வடித்து விடுவது உலக நியாயமாகவே வழங்கி வந்துவிட்டது போலும். என் கையிலுள்ள 500 ரூபாயை கரைப்பதற்கு எத்தனை விதத்தில் பெற்ற தாயும், பிறந்த பிறப்பும், கட்டிய மனைவியும் சேர்ந்து போட்டி யிடுகிறார்கள். உலகத்தில் ஒரு மனிதனுக்கு இதைவிட சொந்தமான மனிதர்கள் கிடையாது. அத்தகைய சொந்தமே இத்தகைய நிலைமையில் இருக்கையில் என் கதியை நான் யாரிடம் முறையிட்டுக்கொள்வது?

என்னுடைய சகலமான கஷ்டமும் தெரிந்தும் என்னைப் பெற்ற தாயே சோதித்தாள்...அதுதான் ஒரு வழியாக முடிந்ததென்றால் உடன் பிறந்த சகோதரியுமா எனக்கு இம்மாதிரி எழுதுவது. சீர்வகைகளினால் நான் அண்ணனே யன்றி உடன் பிறந்த ரத்த பாசத்திற்காக நான் ஒரு பொருட்டாகவும் தோன்றப்படவில்லை. சீர்வகைகள் இல்லை என்றால் நான் கேவலம் சின்னத்தனமுடைய பகைவனாகவும் ஆய்விடுவேன் போலிருக்கிறது...

சீச்சீ....மதி கெட்ட மனைவியுடன் வாழ்வதைவிடக் கதிகெட்டு பிச்சை எடுத்துண்ணலாம். மானமுள்ளவனாயின் நதியில் மூழ்கி

பிராணனை விடலாம்...கணவனின் சுகதுக்கம் இரண்டிற்கும் சம பாத்யதை உடையவளும், நிழல் போன்றவளும் என்று புகழத்தக்க மனைவியே இம்மாதிரி சதி செய்தால் இதை யார் தீர்ப்பார்கள்? சற்று ஏறுமாறாக விருப்பாளே யாமாயின் கூறாமல் சன்னியாசங் கொள். என்ற பழமொழிப்படிக்குத்தான் என் விதி முடியப் போகிறது. இல்லையேல் குளமோ, குட்டையோ, கிணறோ,...ரயில் தண்டவாளமோ! தூக்கோ!...அப்பப்ப...இத்தகைய பயங்கரங்களில் ஒன்றுதான் என் பிராணனை கைக்கொள்ளப் போகிறது...ஊம். விதி விதி...என்று தன்னை மறந்த விசனத்துடன் துக்கித்துக்கொண்டிருந்தான்.

அச்சமயம் எதிர் வீட்டில் தடபுடலான கூச்சலும், அடிக்கும் சப்தமும் அழுகுரலும் கேட்டன. "இதென்ன விபரீதம்! யாருக்கென்ன ஆபத்தோ!" என்று நாராயணனே திகைத்து ஜன்னலால் எதிர் வீட்டை உற்று நோக்கினன். எதிர் வீட்டுக்காரர் அபாரமான கோபத்துடன், "ஏண்டீ! நீ அம்மாதிரி செய்தாய்? எதிர் வீட்டு சீதாவின் லக்ஷணம் உனக்குத் தெரியாதா! அவள்தான் ரெண்டாங் கெட்டான். குடும்பத்து வருத்தம் தெரியாத மூடம். அவள் வந்து உன் மூலமாகக் கேட்டால் உனக்கு புத்தி எங்கே போயிற்று.

உன் மண்டையில் மூளையில்லையா! ஐயோ பாவம்! நாராயணன் படும் கஷ்டம் எனக்குத் தெரியாதா! அவன் எங்கிருந்து இத்தனை பணத்தையுங் கொடுப்பான்...இந்த கடன் உன் தலையில்தான் வந்து விழுந்துவிட்டது...போ...உடனே போ...சேலைகளையும் பாவாடைகளையும் வாங்கித் திருப்பிக் கொடுத்துவிடு...இல்லையேல் முதலில் பணத்தை வாங்கிக்கொண்டு வா!......அதுவும் இல்லை என்றால் உன் கழுத்துச் சங்கிலியைக் கழட்டிக் கொடுத்து கடனை தீர்த்துக் கொண்டு வா !

உம்...போ...பெண்பிள்ளைகளின் பெருதனம் இத்தகைய திண்டாட்டத்தில்தான் வரும்...நான் ஒருவன் இருப்பதை மறந்தாயோ! நான் இறந்துவிட்டதாக எண்ணி நீயே சர்வாதிகாரம் செய்ய வாரம்பித்து விட்டாயோ!...உம்...போடீ!....அழுகையைப்

பார்த்தாயா! போடீ!...கடன் என்ற சப்தமே உதவாது என்று நான் இருக்க, நீ ஊர் எழவுக்கெல்லாம் கடன் வாங்கி என் மானத்தையா வாங்கப் பார்க்கிறாய். போ...போ...என்று தன் மனைவியை முதுகி லும் தலையிலும் அடித்துக் கழுத்தைப் பிடித்து தள்ளுகிறார். அவள் அழுதுகொண்டே ஏதோ சொல்வது நாராயணன் காதில் சரியாக விழவில்லை.

இந்த கோரக் காட்சியை தூரவிருந்து பார்க்கும் நாராயண னுடைய மானமும் ப்ராணனும் போய்விடும்போல அத்தனை வேதனை செய்கிறது. சந்திராவை ஆத்திரத்துடனழைத்து "அதோ!;எதிர் வீட்டில் பாரு. உன் தாயார் எனக்குத் தேடிவைக்கும் பகுமா னங்கள் போதாமல் எதிர்வீட்டு அம்மாளுக்கு என்ன பரிசும் மரியாதையும் கிடைக்கின்றது பார்த்தாயா! சந்திரா! இந்த வேத னைகளை என்னால் கண்டு சகிக்கமுடியவில்லை. முதலில் அந்த துணிகளைக்கொண்டு கொடுத்துவிட்டுக் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொள்ளுங்கள். ஊம்...கொண்டுவா'!"...என்றான்.

சந்திரா என்ன பதில் சொல்வாள் பாவம்!தன் தாயின் செய்கை ஒவ்வொன்றும் அவளுக்குத் தெரியாததல்ல. வாங்கிய ஜவுளியைத் திருப்பிக் கொடுக்காமலிருப்பதற்காகவே முதலில் பிரித்து விட்டதும் அவளறிவாள். இதைச் சொன்னால் தன் பிதாவின் சீற்றம் அதி கரிக்கும். என்ன செய்வதென்று தோன்றாது திகைத்துவிட்டாள்.

நாராயணன் தன் மனைவியை நேரே இழுத்துக்கொண்டுபோய் 'எதிர்வீட்டு அம்மாளுக்கு உன்னால் நேர்ந்த சங்கடத்தைப் பாரு' என்று காட்டும்பொருட்டு, தடதடவென்று சமையல் உள்ளே சென்றான். அங்கு ஸ்வாமி சன்னிதியில் அன்று எடுத்த ஜவுளி களைப் பிரித்துவைத்திருப்பதைப் பார்த்ததும் தீயை மிதித்தவன் போல துள்ளிக் குதித்தான். மூலைக்கொன்றாக ஜவுளிகள் பறந்தன.

இதற்குள் எதிர்வீட்டு அம்மாள்மீது தடார் புடார் என்று உதை விழுவதைக் கண்ட நாராயணனின் மனம் கொதித்தது. தன் மனைவியினால் அந்தம்மாள் அடிபட்டுச் சாவது நியாயமா! ஜவுளியை என்னவோ திருப்பிக் கொடுக்க முடியாதபடிச் செய்துவிட்டாள்.

பணத்தை துலைத்துத்தானே தீரவேண்டும்...உபகாரம் செய்ததற்குப் பிரதி உபகாரம் அடியும், உதையுமா? என்று எண்ணி விசனித்தபடி பணத்தையும் பில்லையும் எடுத்துக்கொண்டு தானே எதிர் வீட்டிற்கு ஓடினான்.

"என்ன கிருஷ்ணசாமீ! நீங்கள் இப்படிச் செய்வது சரியில்லை. நான் பணத்தைக் கொடுக்காமல் மோசம் செய்து விடுவேனா! இதற்காக இம்மாதிரி அடித்துக் கொல்வது சற்றும் நன்றாக இல்லை. இதோ! பணமும் பில்லும்" என்று கொடுத்தான்.

கிருஷ்ணசாமி இத்தனை லேசாகப் பணம் வந்துவிடும் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லையாதலால் அவனுக்கே ஆச்சரியமாகி விட்டது. பணத்தை வாங்கிக்கொண்டு "அப்படியில்லை சார். உங்கள் நிலைமை எனக்குத் தெரியும். இத்தனை பெரிய தொகையை எப்படி உடனே கொடுக்க முடியும் என்று எண்ணினேன். அதோடு நான் இம்மாதிரி விஷயங்களில் சுட்டு பட்டவன் சார்! கோபாலன் வீட்டில் இப்படித்தான் பெண்டுகளின் மூலம் பெண்டுகள் ஜவுளி வாங்கி விட்டார்கள் அவர்கள் வாங்கின பணத்திற்கு நான் அவர்கள் வீட்டிற்கு 500 நடை நடந்தும் கடைசியில் 50 ரூபாயிக்கு ஜவுளிக் கடைக்காரன் எனக்கு நோட்டீஸ் விட்டு என்னிடமிருந்து கக்கிக் கொண்டான். இன்னமும் 50 ரூபாய்க்குப் பட்டை நாமந்தான். இம்மாதிரி சில்லரை பேரங்களிலும் நான் அனுபவப்பட்டுவிட்டேன். அதற்குப் பிறகு 7—8 வருடங்களாக இந்த தாக்ஷிண்யமே வேண்டாமென்று விட்டிருக்கையில் இவள் இம்மாதிரி செய்தால் நான் என்ன சார் செய்வது? உங்கள் சம்சாரத்தின் மாதிரியை அறிந்தும் அவர்களுக்கு இவள் இம்மாதிரி வாங்கிக் கொடுத்ததில் உங்களுக்குத்தானே நஷ்டம்." என்றான்.

நாராயணன் என்னதான் சாமர்த்தியமாகப் பதில் சொல்ல எண்ணியபோதிலும் மனத்திற்குள்ளெழும் கொதிப்பை மாற்ற முடியுமா! பணத்திற்கு ரசீது வாங்கிக்கொண்டு விதியே என்று வீட்டிற்கு வந்தான். மனம் இருக்கை கொள்ளவில்லை, விசனத்துடன் எழுந்து மனம் போனவாறு நடக்கவாரம்பித்தான்.

அவனையறியாமலேயே சுமார் இரண்டு மூன்று மைல்கள் நடந்துவிட்டான். சம்சாரமோ, சாகரமோ! எந்தச் சனியன் எப்படியாவது போகட்டும். நாம் இனி வீட்டிற்கே போகாமல் இப்படியே கண் காணுது ஓடிவிடலாமா!...தேசாந்திரியாகப் போய் விடலாமா!...சன்யாசம் வாங்கிக்கொண்டு ராமா, க்ருஷ்ணு என்று காலத்தை முடித்துவிடலாமா? அன்று பாபமாயினும் ஆகட்டுமென்று தற்கொலையே புரிந்துகொள்ளலாமா...என்று பல விதமாக மனம் குழம்பிப்போய் யோசனை என்கிற அலையில் மோதுண்டபடியே நடந்து செல்கிறுன்.

நன்ருக அஸ்தமனமாகிவிட்டது. தான் எதற்காக, எங்கே நடக்கிறுன் என்றதே தோன்ருமல் கால் இழுத்த இடமெல்லாம் நடந்து செல்கையில் கோயிலில் பக்தர்கள் தோத்திரம் செய்யும் நாம சப்தம் காதில் விழுந்தது. உடனே சற்று நினைவு பெற்று அருகிலுள்ள குளத்தில் கைகால்களை சுத்தம் செய்துகொண்டு கோயிலுக்குள் புகுந்தான்.

அன்று கோயிலில் ஏதோ விசேஷமாகையினுல் பகவான் அலங்காரங்களுடன் வெகு ஆநந்தமூர்த்தியாக சேவை ஸாதிக்கும் காட்சி கருத்தையுருக்கி, மனத்தை பரவசமுறச்செய்தது. நாராய ணன் எம்பெருமானின் தரிசனும்ருதத்தில் ஈடுபட்டு தன்னுடைய துயரங்களைச் சிறிது நேரம் மறந்து "என்னப்பனே! ஜகத்ரக்ஷகா! சர்வலோக சரண்யா!...அகிலமெல்லாம் கட்டியாளும் ஆண்டவனே!

"மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோரின் சொலில்லை
சினத்தினுல் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன்வாளா
புனத்துழாய் மாலையானே! பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கினிக் கதியென்சொல்லா யென்னையாளுடைய கோவே!"

"ஊரிலேன் காணியில்லை உறவுமற்றெருவரில்லை
பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா! அரங்கமா நகருளானே!"

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

என்ற பாடல்களைப் பாடி மனமுருகிக் கண்ணீர் வழிய, தோத்திரம் செய்துப் பின்,ப்ராகார ப்ரதக்ஷணம் வருகையில் அங்கு கும்பலாக ஸ்திரீகள் நின்று அட்டகாஸமாகக் கொம்மாள மடித்துக் கொண்டும் பேசிச் சிரித்துக்கொண்டு மிருந்தார்கள். அந்த கூட்டத்தில் தன் மனைவி சீதா ப்ரதானமாக விளங்கி நிற்பதையும், அவளது புதுப்புடவையை எல்லோரும் தொட்டுப் பார்த்துப் பேசுவதையும் கண்ட நாராயணன் "அட...இவள் இங்கு எப்படி வந்தாள்?"... என்று திடுக்கிட்டான். வயிற்றில் கொதிப்பும், வேதனையும் அதிகரித்தன. கோபச் சிலைபோல நின்றுவிட்டான்.

8-வது அதிகாரம்

நேசர்களின் அன்பு—மாசற்ற இன்பம்

சுகந்தவல்லியும், ரங்கநாதனும் திகில் பிடித்துக்கொண்டு தவிக்கிறார்கள். நடுநிசியில் எங்கு சென்று தேடுவது, என்ன செய்வது..."நாதா! உடனே நீங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பாருங்கள். இத்தனை நாள் கொண்டுவைத்திருந்ததற்குப் பலனில்லாது போய்விடும்," என்றாள்.

உடனே ரங்கநாதனும் இதை ஆமோதித்து ஸ்டேஷனுக்குச் சென்று பார்த்தான். அங்கு ஒருவரையும் காணவில்லை. "ரயில் ஏதாவது சமீபத்தில் சென்றதா, இவ்வூரிலிருந்து டிக்கட்டு வாங்கிக் கொண்டு யாரேனும் சென்றார்களா?" வென்று விசாரித்தான். ஒரு வண்டி சென்றதாயும் யாரோ மூவர் இவ்வூரிலிருந்து டிக்கட்டு வாங்கியதாயும் எந்த ஊருக்கு வாங்கினார்கள் என்று தெரியாதென்றும் கூறினார்கள்.

இது கேட்ட ரங்கநாதனுக்கு பின்னும் கலக்க மூண்டாகிவிட்டது. 'அம் மூவரில் இவனும் ஒருவனை விருப்பானே!' வென்று யோசித்தபடியே வீட்டிற்கு வந்து சுகந்தவல்லியிடம் விஷயத்தைத் தெரிவித்தான். உண்மையில் இவ்விருவருக்கும் மிகுந்த பயமே பிடித்துக்கொண்டது. இதே கவலையுடன் இரவை யோட்டினர்கள்.

மறுநாள் வழக்கம் போல ரங்கநாதன் காலை நேரத்தில் உலாவச் சென்றான். சிலுசிலுப்பான காற்றும், சூர்யோதயத்தின் அற்புதமான அழகும், பக்ஷியினங்களின் சந்தோஷ ஆரவாரமும் மக்கள் தம் தம் தொழிலைச் செய்யும் பொருட்டு சுறுசுறுப்பாகச் செல்லும் காட்சியும் ரங்கநாதனின் மனத்தைப் பரவசப்படுத்தின.

அவ் வூரிலுள்ள அழகிய நதிக்கரையோரம் உலாவிவிட்டு நதியிலேயே ஸ்நானத்தையும் செய்துவிட்டு வீட்டிற்கு வரும் வழக்கம் போல நதிக்குச் சென்றான்.

அக்கரையின் மீறுள்ள ஓர் அழகிய மாந்தோட்டத்தினுள் புகுந்துதான் நதிக்குச் செல்வது வழக்கம். அதுபோல மாந்தோப்பிற்குள் சென்றான். அங்கு ஓர் மாமரத்தின் அருகிலுள்ள பெரிய பாறைக்கல்லில் பத்மநாபன் தன்னை மறந்து படுத்துத் தூங்குவதைக் கண்ட ரங்கநாதன் திடுக்கிட்டான். "இதென்ன...இங்கு இவன் எப்படி வந்து படுத்துக்கொண்டான்?" என்று வியப்புற்று பத்மநாபனின் அருகில் சென்று "நண்பா! பத்மநாபா! இதென்னடா இங்கு படுத்து உறங்குகிறுய்? இரவு முதல் எங்களை அல்லாடித் தவிக்கவைத்து விட்டாயே! எழுந்திரு"...என்று எழுப்பினான்.

அயர்ந்து தூங்கும் பத்மநாபன் ரங்கநாதனின் குரலைக் கேட்டதும் அலறி யடித்துக்கொண்டு எழுந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்து விழித்தான். அவன் முகத்தில் அடக்க முடியாத ஓர் சோகக்களையும், அசட்டுப் பார்வையும் ஜொலிக்கின்றன. கண்ணைத் துடைத்துக்கொண்டு "நண்பா! என்னை மன்னிக்கவேண்டும். நான் ஏதோ முட்டாள்தனமாக இரவு வந்துவிட்டேன்......என்று இழுத்தான்.

ரங்க:—(இடை மறுத்து) நண்பா! இரவு நீ வெகு நேரம் தூங்க வில்லை என்பதை நானும் என் மனைவியும் கவனித்தோம். தான் சொல்லிய வார்த்தைக்காக நீ கோபித்துக்கொண்டு ஊருக்குப் போய் விட்டதாக எண்ணி சுகந்தா மிகவும் விசனிக்கின்றாள். நானும் அப்படியே வருத்தப்படுகிறேன். நான் சொல்லியது குற்றமாயின் நீ என்னை மன்னித்துவிடு......என்று கூறுவதற்குள் பத்மநாபன் ரங்கனின் கைகளைப் பிடித்துக்கொண்டு "நண்பா!...நீயும் மன்னியும் என்னைப்பற்றி அத்தனை வித்யாசமாகவா எண்ணிவிட்டீர்கள்? ரங்கநாதா! என் மீதுள்ள அவ் வெண்ணத்தை முதலில் மாற்றிக் கொள்ளுங்கள்.

நண்பா! நான் ஒருவர் மீதும் கோபிக்கவில்லை. என் புத்தி கெட்டத்தன்மையையும், எனது வெட்கக்கேடான நிலைமையையும் எண்ணி நான் விசனிக்கின்றேனே யல்லாது வேறு ஒன்றுமில்லை." என்பதற்குள், ரங்கன் "என்ன! என்ன! உனது முட்டாள்தனமா! உனது வெட்கங் கெட்ட சரிதையா! என்ன இது? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! நீ திடீரென்று விசனிக்கும்படியாக என்ன ஏற்பட்டது?" என்றான்.

பத்ம:—ரங்கநாதா! இனி ஒளிப்பதென்ன, மறைப்பதென்ன; என் மனமும் இதயமு ம்எவ்விதம் தத்தளிக்கின்றதோ, அதை விவரித்துக் கூறவே என் திறமில்லை. இதயம் வெடித்துவிடும்போல விருக்கிறது. நண்பா! நேற்று மாலையில் அந்தப் பெண் பாடும்போது நான் இன்பசாகரத்தில் ஆழ்ந்து அதைக் கேட்டுக்கொண்டே இருந்தேன். அத்தனை அழகாகப் பாடும் பெண்மணி யாரோ வென்று எழுந்து பார்த்ததும் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. பிறகு இரவு மன்னி விளக்கமாகக் கூறியதும் என்னிலைமை எப்படியாயிற்றோ ஈசனுக்கே அர்ப்பணம்...அந்தப் பெண்ணின் துயரத்தையும் அவள் புருஷன் குத்துக்கல் போல இருக்கிறான் என்றும் மன்னி சொல்லியபோது என் இதயத்தில் ஈட்டிகள் போட்டு குத்துவது போல வதை செய்தது. நண்பா! அருங் குணபூஷண மணியாயும், சங்கீத கலாவல்லவியாயும், அதி ரூப சுந்தரியாயும் விளங்கும் அந்த அங்கனை மணியை ஆயிரம் பேரறிய அக்கினி சாக்ஷியாக மணம்

செய்து கைப் பிடிக்கும் பாக்கியத்தைக் கடவுள் கொடுத்தும் என் முட்டாள்தனத்தினுல் இன்பஜோதியை அனுபவிக்காது அந்தகார மான இருளில் அலேந்து தவிக்கின்றேன்......

ரங்க:—......என்ன!...என்ன...நண்பா!...ஜானகி உன் மனே வியா!...ஜானகியா உன் மனைவி!...ஆகா!...என்ன ஆச்சரியம்! எனக்கு நம்பவே முடியவில்லேயே! இந்த அதி வியப்பான விஷ யத்தை சுகந்தா கேட்டால் என்னே விடப் பூரித்துவிடுவாள். அக மகிழ்ந்து அங்கம் பொங்கப் புலகிதமாவாள்...நண்பா! இத்தகைய ரூப சுந்தரியாயும், குணவதியாயும், வனிதாரத்தினமாயும் விளங்கும் ஜானகியைப் பற்றி உன் தாயார் சொல்லிய வார்த்தைகளே எண்ணி ஞல் உண்மையில் அப் பெண் யாராக இருப்பினும் என் மனம் இப் போது பதறுகிறது...

அப் பெண் மகா கோரமென்றும்,அவள் குணம் மகா மோசம் என்றும்,நடத்தை வெகு ஆபாசமென்றும் தங்கள் மானம் போவதா யும் இன்னும் ஏதேதோ கூறினுர்கள். அப் பெண்ணே நான் அடி யோடு அறியமாட்டேனுகையினுல் அது உண்மை என்றுதான் நம் பினேன். இருப்பினும் உன் பெற்ருேர்கள் செய்வது அக்ரமம் என் றும், நீ செய்வதும் மூடத்தனம் என்றும் நான் பலதரம் வெறுத்த துண்டு. நண்பா! உன் மனம் உனக்கு இத்தனே நாள் எப்படி இடங் கொடுத்தது...

பத்ம:—ரங்கநாதா! அந்த கேள்வியை நேற்றிரவு முதல் என் மனமே என்னேக் கேட்கிறது. பதில் பேச முடியாது தத்தளிக்கின் றேன். ஜானகியை நான் கடைசி தரமாக தீபாவளி யன்று மணேயில் உட்கார்ந்திருக்கையில் பார்த்ததுதான். அப்போதும் வெட்கம் ஒன்று குறுக்கிட்டது. என்னேச் சுற்றியும், ஜானகியைச் சுற்றியும் சுமார் 10 பேர்கள் சதா சுற்றிக்கொண்டே இருந்தார்கள். அதோடு அன்றே புடவைகள் விஷயமாகவும்,பக்ஷண விஷயமாகவும் சண்டை சிறியதாக வாரம்பித்துப் பெரியதாக மாறிப் பலத்து பிரம்மாண்டத் திற்கு வந்துவிட்டது. அந்த வேகத்தில் தீபாவளியன்று சாயங் காலமே மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டோம்.

ரங்கநாதா! உண்மையில் அன்று நான் அரை குறையாக ஜானகியைப் பார்த்தபிறகு இடையில் நான்கு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. அதற்குப் பிறகு நேற்றுதான் என் கண்ணார அவ்வனிதையைக் கண்டேன். என்னைப் பெற்ற முன்னறி தெய்வங்களாக விருந்தபோதிலும் என்னை அடியோடு முட்டாளாக்கி அப் பெண்ணைப்பற்றி உனக்குச் சொல்லியதை விட ஆயிரம் பங்கு அதிகமாக எனக்கு தினம் முக்காலமும் கூறி உறையேற்றி ஏற்றி என் மனத்தை சற்றும் அசைய விடாது தடை போட்டுக்கொண்டே வந்தார்கள்.

நீயே சொல்லு. ஒரு பெண்ணைப் பற்றி எனக்கு நேர் முகமாகவும் ஒன்றும் தெரியாது; பெற்றவர்கள் சதா சொல்லிக் கொண்டே இருந்தால் நான் எதை நம்ப முடியும்? என்னுடைய மனம் தாயாரின் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கும்படித்தான் தூண்டியது. அப்படியேதான் நான் நடந்து வந்தேன். எனினும் என் தாயார் இரண்டாவது விவாகத்தைப் பற்றிப் பேசும்போது மட்டும் என் மனம் அதற்கு இடங் கொடுக்காது தவித்தது. அச்சமயந்தான் நீயும் வந்து என்னை யழைத்துக்கொண்டு வந்தாய்.

நண்பா! நான் பாக்கு வெட்டி மத்தியில் அகப்பட்டுக் கொண்டிருப்பது போல தத்தளிக்கின்றேன். ஜானகியைப் பார்க்கு முன்பு என் மனம் முற்றிலும் வேறாகவே இருந்தது. நேற்று ஜானகியை என் கண்ணாரக் கண்டபிறகு என் மனம் படும் பாட்டைக் கூறவே திறமில்லை. நான் என்ன செய்வேன்? நான்கு வருடத்திற்கு முன்பு பார்த்தபோது இருந்த உருவத்தில் நாலில் ஒரு பாகந்தான் தற்போது இருக்கிறாள். அத்தனை மெலிவுற்று வாடி வதங்கி யுள்ள அவளது உள்ளம் எவ்வளவு வருந்தி இருக்காது...சீச்சீ...நண்பா! உன் மனைவிக்கு அவள் எழுதியுள்ள ஒரு கடிதத்தை நான் பார்த்து விட்டேன். அதற்காக இருவரும் மன்னித்துவிடுங்கள். அதில் தன்னைப் பிரித்து வைத்திருப்பதற்கு ஒரு உபமானம் வரைந்திருந்தாள். அந்த உபமானம் ஒன்றே அவளுடைய மனோ வேகத்தையும், துன்பத்தின் ஆழத்தையும், புத்திசாலித்தன்மையின் எல்லையை

யும் தெட்டெனக் குறிப்பிட்டுக் காட்டியது...ரங்கநாதா!....இவன் என்ன திடீரென்று பித்தன் போல பிதற்றுகின்றானே என்று நினைக்கின்றாயா!...ஆம்...உண்மையில் நான் பித்தன் போலவே ஆகிவிட்டேன். நான் கனவிலும் கண்டிராத கவலையும் என்னை யறியாத மன எழுச்சியும் என்னை முற்றிலும் கப்பிக்கொண்டு ஆட்டுகின்றன. என்ன செய்வேன்?'' என்று கண்ணீர் வழியக் கூறினான்.

ரங்கநாதனுக்கு பத்மநாபனின் வார்த்தைகளை கேட்கக் கேட்க ஆச்சரியமும் ப்ரமிப்பும் உண்டாகிவிட்டன. "பத்மநாபா! உன்னுடைய இந்த புதிய மாறுதலைக் காண இதற்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் விழிக்கின்றேன். நாம் வீட்டிற்குச் சென்று சுகந்தாவினிடம் இச் சந்தோஷகரமான செய்தியைக் கூறி அவளுடைய கவலையைப் போக்குவோம் வா! சுகந்தா ஜானகியின் ஆப்த தோழியாகையினால் என்ன சொல்வாளோ பார்க்கலாம். எழுந்திரு.'' என்று பத்மநாபனுக்குத தேறுதல் சொல்லியபடியே அழைத்துக்கொண்டு வீட்டை இருவரும் அடைந்தார்கள்.

சுகந்தவல்லி வழக்கம்போல காப்பியும் பலகாரமும் செய்து வைத்துக்கொண்டு வாசலிலேயே நின்று வழி பார்த்துக்கொண்டிருந்தாள். தன் கணவனுடன் பத்மநாபனும் வருவதைக் கண்டு பரம சந்தோஷத்தை யடைந்து "அப்பாடா! உங்கள் சினேகிதரைக் கண்டு பிடித்து அழைத்து வந்து விட்டீர்களா! இப்போதுதான் எனக்குக் கவலை விட்டது. வாருங்கள். சாப்பிடுங்கள்....எங்கே போயிருந்தார்?'' என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

ரங்க:—சுகந்தா! அவனைக் கண்டுபிடித்து அழைத்து வந்தது மட்டுமல்ல, இன்னும் அதியத்புதமானதும், நீ உன்னை மறந்து பூரித்து சந்தோஷமடையக் கூடியதுமான விஷயத்தையும் அறிந்துகொண்டு வந்தேன்.

சுகந்:—அப்படியா! அதென்ன அத்தகைய விஷயம்! உடனே சொல்லுங்கள். என்ன சமாச்சாரம்?—என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டே காப்பி பலகாரங்களை வழங்கினாள்.

ரங்க:—சுகந்தா! உன்னுடைய ஆப்த சிநேகிதை ஜானகியின் துன்ப இருள் நீங்கி இன்பமேஜாதியான வாழ்க்கை உதயமாகிவிடு மென்று ஓர் ஜோஷியர் சொன்னார். அது உனக்கு மிகவும் சந்தோஷமல்லவா!

சுகந்:—அப்படியா! எந்த ஜோஷியர் சொன்னார்? அவளுக்கும் அம்மாதிரி யொரு நற்காலம் பிறக்குமா! இதென்ன என்னை வமாற் றும் பொருட்டு விளையாடுகின்றீர்களா! அவளுடைய மாமியார் வீட்டாரைத் த்ருப்தி செய்வதற்கு 20 ஆயிரம் ரூபாய் கொள்ளை கொடுக்கவேண்டும். அதோடு அவள் மீது இல்லாத பொல்லாத பழியை எல்லாம் சுமத்திவிட்டு இப்போது திடீரென்று அவளை உத்தமி என்று அந்தப் பாவிகள் சொல்வார்களா! இது வெறும் பூச்சி வித்தையான வார்த்தை. அவளுக்கு கஷ்டம் வடிவதாயின் அவள் புருஷனாகிய முட்டாளால் என்றோ வடிந்திருக்கலாம். அவன்தான் தனித்த, வடிகட்டிய...முண்டமாயும், கண்ணிருந்தும் கபோதியாயுமிருக்கிறானே...

ரங்க:—(இடை மறுத்து) சுகந்தா!உனது ஆருயிர்ச் சிநேகிதை யாகையினால் உனக்கு இத்தனை கோபம் வருகிறது. இரு! இரு! அவசரப்படாதே! உன் சிநேகிதையின் புருஷனையே எதிரில் வைத் துக் கொண்டு முட்டாள் என்றும், மூடம் என்றும் திட்டுவது தரும மல்ல. அவருக்குக் கோபம் வந்துவிட்டால் என்ன செய்வது?...

சுகந்:—என்ன! என்ன! ஜானகியின் புருஷன் இவரா! என்ன ஆச்சரியம்...உண்மையில் இவரா!...

பத்ம :—நான் வலியப் பேசுவதற்கு மன்னிக்கவேண்டும். தாயா ரைப் போன்ற உங்களிடம் பேசுவதில் குற்றம் ஒன்றுமில்லை என்று நம்புகிறேன். எனக்கு இவனே அண்ணன். ஆகையினால் நீங்களே மன்னியாவீர்கள். உங்கள் ஆப்த சிநேகிதையை அக்கினி சாக்ஷி யாக மணந்த பாவி நான்தான். நேற்றிரவு நீங்கள் கூறிய யாவும் எனக்கே மிகவும் பொருத்தமாகும். நான் அதனால் சற்றும் விசனிக் கவோ கோபிக்கவோ இல்லை. நான் சர்வ முட்டாள் என்பதையும் வடிக்கட்டிய முண்டம் என்பதையும் ப்ரத்யக்ஷமாக நானே அறி

வேன். ஆனால் இது பரியந்தம் அறியாத மூடமாகத்தான் தாளம் போட்டு ஒத்து பாடிக்கொண்டிருந்தேன். நேற்று முதல்தான் நான் என் மூடத்தன்மையை அறிந்தேன். நேற்று முதல் என் மனம் என்னையறியாது தவித்து வதை படுகின்றது. என் நிலைமை இப்பொழுதுதான் இன்னும் கேவலமான இக்கட்டாக இருக்கிறது.

மன்னீ! எது எப்படி இருப்பினும் சரி! உங்கள் இருவரையும் விட ஆப்த நண்பர்கள் எனக்கு யாருமில்லை. என்னுடைய பக்கத்திலிருந்து நீங்களிருவரும்தான் உதவி செய்யவேண்டும். நான் எப்படியாவது ஜானகியைப் பார்க்கவேண்டும். அவளைப் பார்த்து அவளுடன் என் மூடத்தனத்தைத் தெரிவித்தால்தான் எனக்கு மனம் நிம்மதியடையும். அவள் பற்றோருக்கும் இந்த ரகஸியம் தெரியாமல் நீங்கள் இங்கு வரவழைக்கவேண்டும். என் பெற்றோருக்கு இந்த விஷயம் அசலே தெரியக்கூடாது. இன்றே நீங்கள் சற்று தயவு செய்யவேண்டும்—என்று கண்ணீர்பெருகக் கேட்டான். வெட்கமும் துக்கமும் தொண்டையை அடைத்ததால் தலை குனிந்து விட்டான்.

இந்த பரிதாபகரமான காட்சியைக் கண்டதும் இருவரின் மனமும் இளகிவிட்டது. சுகந்தாவின் மனோ நிலைமையில் என்ன பதில் பேசுவதென்றே தெரியாமல் விழிக்கின்றாள். எப்படியாவது ஜானகியின் துயரம் தீர்ந்தால் போதும் என்று இரவு பகலாக ஏங்கி இருந்த சுகந்தா இந்த எதிர்பாராத ஆநந்தகரமான விஷயத்தைக் கேட்டதும் ஒன்றுமே தோன்றாமல் திகைத்தாள்.

பிறகு தன்னை சற்று சமாதானம் செய்துகொண்டு பத்மநாபனை நோக்கி "நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். என் சினேகிதையின்பால் வைத்த அளப்பரிய அன்பினால் நான் ஏதோ நேற்று சொல்லிவிட்டேன். உங்கள் ப்ரியப்படிக்கு நான் இன்றே என் சினேகிதையை இங்கு அழைத்து வருகிறேன். அவளுடைய பேற்றோர்களும் இவ்விஷயத்தை யறிந்தால் மிக்க சந்தோஷப்பட்டுப் பூரிப்பார்களே. அவர்களுக்குத் தெரிந்தால் என்ன?" என்று மெள்ளக் கேட்டாள்.

பத்ம:—நீங்கள் சொல்வது வாஸ்தவந்தான் எனினும் தற் சமயம் இது விஷயம் அவர்களுக்குத் தெரியுமாயின் அவர்கள் அந்த சந்தோஷத்தினால் இதை எப்படியாவது வெளியிட்டுவிடுவார்கள். இது என் பெற்றோர்கள் வரையில் எட்டிவிடும். பிறகு ஆபத்தாக முடியும்; சகல காரியமும் கெட்டுவிடும். அவர்களுக்குள்ள ஆத்தி ரத்தில் எங்களிருவரையும் அதோகதியாக்கிவிடுவார்கள். இத்தனை நாட்கள் கழித்து நற்காலம் பிறக்கும் என்று எண்ணுவதற்கு மாறாக ஆகிவிடும். எத்தகையோருக்கும் அதிக துக்கத்தையும், அதிக சந் தோஷத்தையும் தாங்க முடியாது போய்விடும். ஆகையினால் சொல் கிறேன். முதலில் அவளை சந்தித்துப் பிறகு மற்றதை யோசிப் போம். ரங்கநாதா! நீ என்ன சொல்கிறாய்?

ரங்க:—பத்மநாபா! நீ சொல்வது வாஸ்தவந்தான். அப்படியே செய்யலாம். சுகந்தா! இன்று உனக்கு முக்யமான காரியம் ஜான கியை இங்கு வரவழைப்பதே யாகும். அவளுடன் கூட யாரும் வராதபடிக்கும், அவள் சற்று நேரம் இங்கு தங்கும்படிக்கும் செய்ய வேண்டும்'—என்றான்.

சுகந்தா மிக்க சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டாள். அன்று அவள் செய்யவேண்டிய வீட்டு வேலைகளைச் செய்யவும் அவளுக்கு மனம் நாடவில்லை. விரைவில் எல்லாவற்றையும் முடித்துவிட்டு பகல் 2 மணிக்குமேல் ஜானகியின் வீட்டிற்குச் சென்று, வழக்கம் போல பேசிக்கொண்டிருந்து பிறகு ஜானகியின் தாயாரை நோக்கி "மாமீ! இன்று எனக்குத் தெரிந்த ஓர் சினேகிதையின் பெண்ணுக்கு கலியாணம். அதற்காக தெற்கே இருந்து வெகு அற்புதமாகப் பாடக் கூடிய பாடகரை வரவழைத்திருக்கிறார்கள். அத்தகைய அற்புத மான சங்கீதத்தின் ஆநந்தத்தை நான் மட்டும் கேட்டு மகிழாது என் தோழிக்கும் கொஞ்சம் பங்கு கொடுக்க விரும்புகிறேன். மாலை 4 முதல் 7 மணி வரையில்தான் கச்சேரி. அது முடியும் வரையில் நான் நிற்கவில்லை. மத்தியிலேயே அழைத்துக்கொண்டு வந்து விடு கிறேன். என்னை நம்பி என்னோடு இன்று ஒரு நாளைக்கு அனுப்பக் கூடாதா?" என்று வெகு தந்திரமாகக் கேட்டாள்.

இது கேட்ட அந்தம்மாள் "ஊம். என்ன சுகந்தா! நீ கூட இம்மாதிரி கேட்கிறாய்? எனக்கு உன்னிடம் நம்பிக்கை இல்லை என்று நினைக்கிறாய்? அவள் தலைவிதியின் கோளாறினால் அவளை வெளியில் அனுப்பவும் பயப்படுகிறோம். மனம் காவல்தான் ப்ரதானம் என்பதை யறியாமலா இருக்கிறோம். என்ன செய்யலாம். வெறுமை இருக்கும்பொழுதே அந்த மகா பாவிகள் குழந்தையின் தலையில் பாறையைப் புரட்டுகிறார்களே! அவர்களுக்காகத்தான் பயப்படுகிறேன்." என்றாள்.

சுகந்:—நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான். நான் மறுக்கவில்லை. எனினும் வீட்டை விட்டு வெளி நாடாம லிருக்கையில் அவர்கள் என்ன கொண்டாடிப் பூஷிக்கிறார்கள்? இதற்காக எத்தனை காலந்தான் சிறையிலிருப்பது போல இருக்கலாம். சற்று கூட மனத்திற்கு உத்ஸாகம் வேண்டாமா! நீங்கள் பயப்படுகிறபடி இங்கு அவர்களுக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லை. அவர்கள் அசல் ஆந்திர தேசத்தினர்கள். நமது தமிழ் பாஷை கூடத் தெரியாதவர்கள். ஆகையினால் பயமில்லை. அனுப்புங்கள். என்றாள்.

அதே சமயம் ஜானகியின் தகப்பனார் இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர் தன் மனைவியை நோக்கி "ருக்மிணி! நான்கு வருட காலமாகச் சிறைவாசம் செய்யும் குழந்தைக்கு என்ன நன்மை கிடைத்தது. வீட்டில் அடைபட்டுக் கிடப்பதில் மூளையே குழம்பிவிடும் போல இருக்கிறது. இதுகாறும் சொல்லியதை விட இனிமேல் சொல்லப் போவதொன்று மில்லை. குழந்தையை அனுப்பு...ஜானகி!...போய் விட்டு வாம்மா!...வீணாக விசனப்பட்டு உபயோக மென்ன. போம்மா!" என்று திட்டமாகக் கூறிவிட்டார்.

சுகந்தவல்லியின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. "ஜானகி! எழுந்திரு!" என்றாள். ஜானகி வெகு வணக்கத்துடன் 'நீங்கள் போங்கள். நான் இன்னும் சற்று நேரத்திற் கெல்லாம் வருகிறேன்" என்றாள். சுகந்தாவும் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

பத்மநாபன் சுகந்தாவின் வரவையே எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தான். நிமிடத்திற்கு நிமிடம் அவனது மனம் ஜானகி

யின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவள் வந்தால் தன்னுடன் பேசவும்,தன் முகத்தைப் பார்க்கவும் பிரியப்படுவாளோ: அல்லது தான் இத்தனை வருடங்களாகச் செய்த கொடுமைக்குக் கோபித்துச் சென்று விடுவாளோ! என்ன விதமாக அவளிடம் பேசுவது போன்ற விஷயங்கள் மனத்தில் போராடிக் கொண்டிருக்கின்றன. அன்று சாப்பாடு கொள்ளவில்லை. சுகந்தவல்லி மட்டும் தனிமையில் வருவதைக் கண்டதும் பத்மநாபனுக்கு திடுக்கிட்டது. அவள் வருவதற்கு மறுத்துவிட்டாள் என்றே எண்ணிப் பதறியவாறு "ஏன்! மன்னி! போன காரியம் காயா!"....என்று திடுக்கெனக் கேட்டுவிட்டான்.

சுகந்:—(நகைத்துக்கொண்டே) இல்லை! இல்லை. நல்ல கனிந்த பழந்தான். கடவுள் கிருபையினால் உடனே பழுத்துவிட்டது. இரவு 7மணி வரையில் வைத்துக்கொள்ளும்படி உபாயத்துடன் பேசிவிட்டு வந்திருக்கிறேன். உங்கள் நண்பர் இன்று மூன்று மணிக்கே வந்து விடுவார். நான் என் மற்றொரு சினேகிதையின்வீட்டு விவாகத்திற்குப் போகப்போவதாகவும் அதற்கு அவளை அழைத்துப்போவதாயும் சொல்லியிருக்கிறேன். ஆகையினால் இன்னும் கால்மணியில் ஜானகி வந்துவிடுவாள். அவளை தந்திரமாக இங்கேயே விட்டுவிட்டு வீதிக் கதவைப் பூட்டிக்கொண்டு நாங்களிருவரும் வெளியே போய் சரியாக 7 மணிக்கு வந்துவிடுகிறோம். பிறகு ஜானகியை அவள்வீட்டிற்குக் கொண்டு விட்டுவிடுகிறேன். அதுவயைில்......

என்று முடிப்பதற்குள் அவைகளைக் கேட்டுக்கொண்டே வந்த ரங்கநாதன் "பேஷ் சுகந்தா! வெகு சந்தோஷம். பழம் நழுவிப்பாலில் விழுந்தது போலாயிற்று. என்னவானாலும் உன் சாமர்த்தியம் ஓர் தனித்ததுதான். 7மணி வரையில் யாரும் தேடிக்கொண்டு வராத விதம் செய்துவிட்டாய்! அதுவரையில் என்று அசட்டுத்தனமாக இழுக்கிறாயே! அதோடு விட்டுவிடு. பத்மநாபா! சரி; போ: இதம்போல நடந்துகொள்ளு." என்றான்.

அவர்களுக்கு காப்பி பலகாரம் கொடுத்தாள். பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் ஜகன்மோகன சிங்கார வடிவழகியான ஜானகி

விசனமே உருக்கொண்ட மனத்துடனும், சோகப் பார்வையுடனும் வெகு வணக்கமாக வந்தாள். ஜன்னல் வழியாக ஜானகியின் வரவைக் கண்டு அபாரமான சந்தோஷமும் புத்துணர்ச்சியும் பெற்ற பத்ம நாபன் தன்னையே மறந்தான்.

சுகந்தாவும் ஜானகியை அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச்சென்று "ஜானகி! நீ வித்யாசமாக எண்ணுதே! உன் வாழ்நாளில் என்றுமே இனி காணப்போவதில்லை என்று கைவிட்டு விட்ட அதியாச்சரியமானதும், நம்பத் தகாததுமான ஓர் இன்ப ஜோதியை நீ திடீரென்று கண்டு களிக்கும் பாக்யத்தைக் கடவுள் இன்று உனக்குக் கொடுத்திருக்கிருர். என்ன.ஏது என்று கேட்காதே எல்லாம் நல்லதிற்கே என்று நம்பு. அதோ! அந்த அறையில் நீ அடையப்போகும் ஆநந்தவெள்ளம் இருக்கிறது. சென்று எடுத்துக் கொள்ளு.'' என்று கூறினுள்.

திடீரென்று இம்மாதிரி விளங்காமல் கூறிய வார்த்தையைக் கேட்டு ஜானகி விழித்தாள். ஒன்றுமே புரியாததால் "சுகந்தா!... நீ சொல்வது எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! என் பாவிப் பிறவிக்கு ஆநந்த வெள்ளமாவது. அப்படிப்பட்டது என்ன இருக் கிறது தியங்காமல் சொல்லு.'' என்ருள்.

சுகந்தா "ஜானகி! குழப்பமடையாதே! நான் கூருமல் நீயே தெரிந்துகொள்ளு. இங்கே வா!'' என்று அவள் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு பத்மநாபன் இருந்த அறைக்குச் சென்று ஜானகியை உள்ளே விட்டுத் தான் வெளியில் வந்து அடுத்த க்ஷணமே தன் கணவனுடன் வீதிக் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட் டாள். எல்லாம் சில வினுடிக்குள் முடிந்துவிட்டன.

ஜானகிக்கு ஒரே கலவரமாகிவிட்டது ஒன்றுமே விளங்காத நிலையில் தன்னை ஓர் அறையில் அழைத்து வந்து விட்டுச் சுகந்தா சென்றதும் நெருப்பை மிதத்தவள் போலத் திடுக்கிட்டாள். அந்த அறையின் கோடியில் யாரோ ஒரு ஆடவன் சாய்மான நாற்காலி யில் சாய்ந்திருப்பதைக் கண்டு அலறினுள். அடுத்த வினுடியே பத்ம

நாபனின் முகத்தை உற்று நோக்கினாள். அவ்வளவுதான். அவளுடைய நிலைமையை விவரிப்பதற்கு இச் சிறு எழுதுகோலுக்கு வன்மையே இல்லை எனலாம்.

கட்டு மீறிய துக்கமும், மெய்ம் மறந்த ஆநந்தமும் போட்டா போட்டி யிட்டு அவளைக் கப்பிக்கொண்டன. மிரளுகிறாள். கண்ணீர் ஆறுய்ப் பெருகுகின்றது. மார்பு தடதடவென்று ஓட்டமாக அடிக்கின்றது. தலை சுழலுகின்றது. தேகமே காற்றிலசையும் மாந்தளிர் போல அசைந்து துவளுகின்றது. அடுத்த நிமிடம் கீழே விழுந்துவிடுவாள் போலாகிவிட்டாள்...

சாய்வான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஜானகியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பத்மநாபன் ஜானகி உள்ளே

வந்ததும் அவளுடைய தத்தளிப்பான நிலைமையைக் கண்டதும் மனந் தாளாமல் அடுத்த வினாடியே எழுந்து, ஜானகி கனவிலும் கருதாத விதமாக அவளெதிரில் வந்து, கண்ணீர் பெருக "ஜானகி! என் கண்மணீ! நான் அன்னியனல்ல. பயப்படாதே. கடவுளறிய உன் கரத்தைப் பிடித்த கணவனே நான். கண்ணே! என்னருமை ஜானகி; என்னை மன்னிப்பாயா! ஏன் சரீரம் இப்படி நடுங்குகிறது. ஜானகி! ஜானகி!" என்று அவளை சேர்த்துத் தழுவிக்கொண்டு அவள் மோவாயைப் பிடித்துக்கொண்டு அதற்குமேல் அவனாலும் பேச முடியாது கண்ணீர் உதிர நின்றுவிட்டான்.

ஜானகிக்கோ முன்னிலும் அதிகரித்த குழப்பமும் கட்டு மீறிய தவிப்பும் உண்டாகிவிட்டன. "இது உண்மையா! அல்லது கனவா" என்று ப்ரமித்துவிட்டாள். பத்மநாபனின் முகத்தை உற்றுக் கவனிக்கிறாள். கண்ணீர் ஆறாய் ஓடுகிறது. வாய் திறந்து பதில் பேச முடியவில்லை; தொண்டையை அடைத்துவிட்டது. மயக்கம் வரும் போலாகிவிட்டது. அவன் தன் கணவன்தான் என்பது மட்டும் தெரிந்துகொண்டாள். அவன் தோள்மீது சாய்ந்தபடியே தன் உணர்ச்சியே அற்று மெய் மறந்து பதுமை போலாகிவிட்டாள்......

9-வது அதிகாரம்

அலைகாற்றிலகப்பட்ட நிலையற்ற தோணி

காசி யாத்திரை செல்லும் கூட்டத்தினருக்கு நேர்ந்த விபத்தைக் கண்டு திகைத்து நின்ற ஜனங்கள் அந்த நடு நிசியில் ஒரு தகவலும் தெரியாது தத்தளிக்கின்றார்கள். அக் கொள்ளைக்காரர்கள் கோம்பிளி பாட்டியைக் கட்டித் தூக்கி எறிந்து விடுவதாகத் தூக்கியதில் உண்மையில் கோம்

பிளி பாட்டி பயந்து நடுங்கி அதே திகிலில் மூர்ச்சையாகிவிட்டாள். மற்ற ஸ்திரீகள் "என் நகை போய்விட்டது. என் பணம் போய் விட்டது. என் மூட்டையைக் காணவில்லையே!" என்று அலங் கோலமாகக் கதறுகிருர்கள்.

இதற்குள் ரயில்வே போலீஸார் உள்பட பலர் வந்து கூடிவிட் டார்கள். அந்த இருளில் காட்டுப் புதர் வழியில் எங்கு சென்று திருடரை எப்படி தேட முடியும்? கூடுமான வரையில் பக்கங்களில் தேடிப் பார்த்தும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. மீண்டும் எல்லோ ரும் வண்டியிலேறி அடுத்த ஸ்டேஷனை அடைந்தார்கள். கோம்பிளி பாட்டிக்கு ரயிலிலிருந்த ஒரு வைத்தியர் சிகிச்சை செய்தார். தள் ளாத கிழவி யாகையினுல் பயம் பலமாக இதயத்தைத் தாக்கி விட்டது.

பணப் பையில் அவர்கள் வைத்திருந்த டிக்கட்டுகளும் போய் விட்டதால் டிக்கட்டின்றி இனி பிரயாணம் செய்வதற்கும் முடியாது போயிற்று. ரயில்வே போலீஸார் இக் கொள்ளையை விசாரிப்பதாகப் பதிவு செய்துகொண்டு எல்லோரையும் அந்த ஸ்டேஷனில் இறக்கி விட்டார்கள். கூட வந்த ஆடவர்களும் கத்துகிருர்கள். ஒவ்வொ ருவரும் லபோ திபோ என்று அடித்துக்கொள்ளும் சத்தம் ஸ்டே ஷனே இடிந்து விடும் போலாகிவிட்டது. என்ன செய்வார்கள் பாவம்!

ஆடவர்கள் தங்கள் கையில் பணமிருந்தால் கும்பல் நிறைந்த அவ் வண்டியில் யாராவது சோதாக்கள், திருடர்கள் மெல்ல அடித்துக்கொண்டு போய்விடப் போகிருர்களே என்று தங்கள் கையில் டிக்கட்டும் கொஞ்சம் சில்லரை மட்டும் வைத்துக்கொண்டு பெண்டுகள் கையிலேயே பணத்தைக் கொடுத்து ஜாக்ரதையாக இடுப் பில்;சொறுகிக் கொண்டிருக்கும்படிச் செய்தார்கள். ஹரோஹரா! அந்த பணமும் சேர்ந்து போய்விட்டதால் என்ன செய்வார்கள் பாவம்!

மொத்த பணத்தையும் கணக்கெடுத்ததில் சுமார் 5 ஆயிரத் திற்குமேல் கொள்ளைபோய்விட்டதை யறிந்து வயிறெரிந்தார்கள்,

கையிலுள்ள சில்லரையைப் பார்த்தாலோ மொத்தம் 2 ரூபாய்கூடத் தேறவில்லை. என்ன செய்வார்கள்! இத்தனை பெயரும் எப்படி திரும்பி ஊர் போவது? பொழுது விடிந்தால் எப்படி ஆகாரம் செய்வது. இந்த முன்பின் தெரியாத ப்ரதேசத்தில் என்ன விதமாக அவர்கள் கால க்ஷேபம் நடைபெறும்? ஐயோ! பாவம்! பரிதாபம்! பரிதாபம்! என்று ஒவ்வொருவரும் சொல்லிவிட்டு விசனப்பட்டுச் செல்கிறார்கள். கூட வந்தவர்களில் ஒருவருக்கு மட்டும் நன்ருக ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். அவருடைய தயவினால்தான் இவர்களின் யாத்திரை இதுவரையில் நன்ருக நடந்தது.

அந்த ஆசாமியின் பணமும் பெண் பிள்ளைகளின் கையில் கொடுத்திருந்தார். அதுவும் போய்விட்டது. அவர் என்ன செய்வதென்று தெரியாமல் தியங்கி விழித்தார். இனிமேல் யாத்திரை எவ்விதம் செய்வது. கையிலிருந்த எல்லாருடைய பணமும் போய்விட்டது. இங்கிருந்து அவரவரது ஊருக்குச் செல்வதற்கும் கையில் கால் காசுகூட இல்லை. என்ன செய்வது என்று ஒருவரோடொருவர் குழம்பித் தவித்துக்கொண்டிருந்தார்கள்.

பொழுதும் விடிந்தது. ஓரே கும்பலாக இவர்கள் உட்கார்ந்திருக்கும் காட்சியைப் பார்த்து ஜனங்கள் பரிதாபப்பட்டுக் கலங்கினார்கள். ஆங்கிலந்தெரிந்த அந்த மனிதர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் பேசி அவருடைய உதவியினால் ஊருக்கு தன் வீட்டிற்கு ஒரு தந்தியடித்து யாத்திரை வந்த எல்லோர் வீட்டிலும் சொல்லிவிடும்படியாகத் தெரிவித்துவிட்டார்.

* * *

மறுதினம் காலை 10 மணிக்குள் தந்தி வந்து சேர்ந்துவிட்டது. அதைக்கண்ட எல்லோரும் அலறினார்கள். இந்த செய்தியை யாத்திரை கிளம்பிய ஒவ்வொரு வீட்டிற்கும் தெரிவித்துவிட்டார்கள். சந்தோஷமாக யாத்திரைக்கு அனுப்பியவர்கள் எல்லாம் குய்யோ முறையோ என்று கத்த வாரம்பித்தார்கள்.

நமது நாராயணன் முன்னதிகாரத்தில் கூறியபடி கோயிலில் ப்ராகார ப்ரதக்ஷணம் வரும்போது சீதா அங்கு சற்றும் மன

வருத்தமோ, சம்சாரத்தின் கஷ்டமோ தெரியாமல் கும்மாளமடித்துப் பேசுவதைக் கண்டு மனங்கொதித்துத் தவித்தான். அவனுடைய அப்போதிய ஆத்திரத்தில் அங்கேயே அறைந்துவிடலாமா வென்றும் தோன்றியது. ஆனால் அவன் மகா மானியாகையினால் தலைவிதியே என்று வருத்தத்துடன் சீதா தன்னைப் பார்க்காதவாறு மறைந்து சென்றுவிட்டான்.

கோயிலின் முன் மண்டபத்தில் வந்து உட்கார்ந்தான். மனமோ தத்தளிக்கின்றது. தான் எந்தவிதமாக மீண்டும் பணத்தைச் சேர்த்து சந்திராவுக்கு முதலில் விவாகத்தைச் செய்வது. இந்த 200 ரூபாயாவது இருந்தால் எப்படியோ சமாளிக்க நினைத்தோம். அறிவில்லாத மனைவியினால் அதுவும் கரைந்துவிட்டது. உற்றாரும் சுற்றத்தாரும் கல்யாணமாகாததற்கு ஏசிப் பேசி வம்படிக்கின்றார்களே யன்றி என்னிலைமையைச் சற்றும் கவனிக்கவில்லை.

பந்துக்களில் யாராவது உதவி செய்வார்களா வென்றால் அன்னியரைவிட அதிகம் பணம் கேட்கிறார்கள். சீர்வகைகள் கேட்கிறார்கள். இத்தனை கன்மனத்தையுடையவர்கள் தூற்றாமலாவது இருக்கலாகாதா! அதுவுமில்லை. பலவிதத்திலும் என்னை இவ்விதம் சோதித்தால் நான் என்ன செய்வேன்? ஈசா! உனக்கு என்பால் இரக்கமில்லையா!'' என்று கண்ணீர் பெருக சிந்தித்துக்கொண்டே அங்கேயே வெகு நேரம் இருந்துவிட்டான்.

பிறகு அகாலமாகிவிட்டதால் பாசம் யாரை விடுகிறது. வீட்டை நினைத்துக்கொண்டு நடக்கவாரம்பித்தான். தன் மனைவி சற்றும் கவலையற்று அங்கும் வந்துவிட்டதுதான் அவனுக்கு அடங்காத ஆத்திரத்தை யளித்தது. வீட்டிற்கு இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்தான்.

அப்போது நல்ல இருட்டுக்கால மாகையினால் வீட்டில் சந்திரா பயந்து நடுங்கிக்கொண்டும், இன்னும் தன் தாயாரையும் காணவில்லை. தகப்பனாரையும் காணவில்லையே என்ன செய்வது என்று தவித்துக்கொண்டும் உட்கார்ந்திருக்கிறாள். தாயார் தன் தகப்பனாருக்குத் தெரியாமல் எங்கேயோ போய்விட்டாளே! அவள்

எங்கே என்று தகப்பனர் கேட்டால் என்ன பதில் சொல்வது. தகப்பனரும் அவ்வளவு கோபத்துடன் வெளியே சென்ருரே! அவருடைய ஆத்திரத்தின் வேகத்தில் எங்காவது ஓடிவிடுவாரோ! அல்லது குளம் கிணறு முதலியவைகளில் விழுந்துவிடுவாரோ! ஐயோ!......நினைக்கும்போதே பயமாகவிருக்கிறதே!" என்று தவித்துக்கொண்டிருக்கையில் நாராயணன் வந்தான்.

சந்திரா வெகு ஆவலுடன் தந்தையின் எதிரே சென்று "அப்பா! இத்தனை நேரம் எங்கே போய்விட்டீர்கள்? சாப்பிடவேண்டாமா! அம்மாவின் மதி கெட்டத்தனத்தை கடவுளே மாற்றினலும் இனி மாறுவது அபூர்வம். இதற்காக வருந்தி என்ன செய்வதப்பா! எங்களை இத்தனை பெயர்களையும் கவனிக்கவேண்டாமா!'' என்று கனிரத்துடன் கூறியபடியே சாப்பாட்டிற்கழைத்தாள்.

நாராயணனுடைய அப்போதைய மன நிலைமையில் ஒன்றும் பிடிக்கவில்லையாகையினல்"எனக்குச் சாப்பாடும்வேண்டாம்;ஒன்றும் வேண்டாம். சந்திரா! என்னைத் தொந்தரவு செய்யாதே! நான் என் விதியை எண்ணி வருந்துகிறேனே யல்லாது வேறு யார்மீதும் குறை கூறவில்லை.

உலகத்தில் யாராவது உன் தாயாரைப் போல குடும்ப வருத்தந் தெரியாத மூர்க்கத்தனமும் முட்டாள்தனமும் கொண்டவர்கள் இருப்பார்களா! இங்கு சாயங்காலமெல்லாம் நடந்த அல்லகல்லோலமென்ன? உன் தாயார் சற்றும் மதிப்போ, பயமோ ஒன்றுமில்லாது புதுப்புடவையையுங் கட்டிக்கொண்டு மூன்று மைலுக்கப்பாலுள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு வெகு தைரியமாகச் சென்று பல பெண்டுகளுடன் வம்பு பேசிக்கொண்டிருக்கிருளே இந்த மனத் துணிபு யாருக்காவது வருமா! எத்தனை நாட்களுக்குத்தான் இவைகளுக்கெல்லாம் நான் பொறுக்கக்கூடும்? என்னுடைய வருத்தத்தின் எல்லையை ஈசன்தானறியவேண்டும். என்றைக்கோ ஒரு நாள் என் பிணம் மிதப்பதைத்தான் நீங்கள் காணப்போகிறீர்கள். அதற்கப்புறமும் உன் தாயாருக்கு புத்தி வரப்போவதில்லை.'' என்று கண்ணீர் பெருகக் கூறியபடியே படுத்துவிட்டான்.

இரவு 11 மணி இருக்கும். வீதிக் கதவை யாரோ தட்டினார்கள் சந்திரா கதவைத் திறந்தாள். ஒரு ஆள் வேர்க்க விறுவிறுக்க "அம்மா! இந்த வீட்டு அம்மாளும் இன்னும் இரண்டு அம்மாளும் வண்டிலே கோயிலுக்குப் போனாங்க. திரும்பி வரச்சே வண்டி கொடெ சாஞ்சிப்பூட்டுது. அல்லாருக்கும் அடிபட்டு அங்கேயே உயிர்துகெடக்கராங்க. ஒரு வண்டி பாத்து இட்டுக்கினு வாங்க" என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் சந்திராவுக்கு குலை நடுங்கி தலையில் இடி விழுந்ததுபோலாயிற்று. இதைத் தன் பிதாவிடம் எப்படித்தான் தெரிவிப்பாள். பயமோ நடுக்குகிறது. நாலாவது வீட்டு அம்மாளின் புருஷன் பெரிய சத்தமிட்டுக் கத்துவதால் தெருவில் கும்பு கூடிவிட்டது. "இந்த கழுதைக்கு தெய்வபக்தி பிறந்துவிட்டது. மோக்ஷத்திற்கு நேரே ஏறிவிடப்போகிறாள். பெட்டைகளின் பெருதனம் வண்டி கட்டிக்கொண்டு ஜம்பமாகத் தான் சென்றதல்லாது உடனிருப்பவர்களையும் இழுத்துக்கொண்டுபோய் அடிபடச் செய்தாள். சனியன் பிடித்தவள். கொஞ்சத்திற்கு இடங்கொடுத்தால் தலைமேல் ஏறுகிறதாயிருக்கிறது." என்று திட்டிக்கொண்டே வேறு ஒரு வண்டியைத் தயார்செய்துகொண்டு வீதியே என்று கிளம்பினாள்.

நாராயணனுக்கு தூக்கம் பிடிக்கின்றதா! இந்த விஷயமெல்லாம் காதில் விழுந்துகொண்டுதானிருக்கிறது. சனியன் எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என்று பேசாது படுத்திருந்தான். அம்மாதிரி இருந்தால் ஊரார் வெறுமனே இருப்பார்களா! வீட்டிலுள்ள ஊழல்கள் யாருக்குத் தெரியும். ஒவ்வொரு நிமிடம் செல்வது ஒரு யுகமாக இருக்கிறது. தினம் படும் வேதனையோ கடவுளுக்கே அர்ப்பணம். எது எப்படியிருந்தபோதிலும் வண்டி குடை சாய்ந்து விழுந்து கிடக்கையில் போய் பார்த்தானா, அழைத்தானா என்று தூற்றுவார்களே என்றும் சற்று அஞ்சினான்.

சந்திராவுக்கோ பெற்ற தாயார் அக்ரமமாகத் தன் தந்தையின் மனத்தை நோகச் செய்தபோதிலும் இம்மாதிரி ஆபத்து வருவதற்கு மனம் வருமா! "என்ன அடிபட்டுவிட்டதோ என்ன ஆகிவிட்டதோ!"

என்று தாங்கமாட்டாத விசனத்துடன் தந்தையிடம் ஓடிவந்து "அப்பா! நீங்கள் எப்படியாவது அம்மாவை மன்னித்துவிடுங்கள். போய் பார்த்து அழைத்துக்கொண்டு வாருங்கள். பேயாயினும் தாய் என்பார்கள். எங்களுக்குத் தாயாகவிருக்கும் பாக்கியமும் போய் விடப்போகிறது சற்று எழுந்திருங்கள்" என்று கெஞ்சினுள்.

உடனே நாராயணன் பதில் பேசாமல் எழுந்து நான்காம் வீட்டுக்காரருடன் கலந்துகொண்டு கையில் ராந்தல் எடுத்துக்கொண்டு சென்றான். இருட்டு கருக்கலா யிருக்கிறது. இரு புறமும் சவுக்குத் தோப்புகளும், மரங்களும் அடர்ந்த நடுக் காட்டுப் பாதையில் அந்த மாட்டு வண்டி ஏடாகூடமாக வந்து ஓர் புளிய மரத்தில் மோதியும் கல்லில் இடி பட்டும் குடை சாய்ந்துவிட்டது.

வண்டி பாதைக்கு இடது புறத்தில் சற்று சாய்வான பள்ளத் தாக்கில் விழுந்து சகடை உடைந்துவிட்டது. அதில் மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் ஏறி வந்தார்கள். நால்வரும் கீழே எக்கச்சக்கமாக விழுந்து கிடந்தார்கள். சீதாவுக்கு வலது புறம் சப்பையிலும், முகத்தில் பல்லிலும் நன்றாக அடிபட்டுவிட்டது.

பல்லிலிருந்து ரத்தம் வழிந்து புதுப் புடவையை நன்றாக அலங்கரித்துவிட்டது. சப்பையில் அடி பட்டதால் எழுந்திருக்க முடியவில்லை. மரத்தடியிலேயே படுத்திருந்தாள். மற்ற இருவருக்கும் நல்ல அடியே பட்டிருந்தது. நாராயணன் அங்கு நிற்பதைப் பார்த்த சீதா ஒன்றுமே பதில் பேசவும் முடியாது கோவென அழ வாரம்பித்துவிட்டாள்.

நாராயணன் சீதாவுடன் பேசவும் இல்லை; திட்டவும் இல்லை. விதியே என்று அவளைத் தூக்கி வண்டியில் போட்டான். எல்லோரும் இரவு 1 மணிக்கு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். சந்திராவும் மற்ற குழந்தைகளும் சீதாவின் நிலைமையைக் கண்டு புலம்புகிறார்கள். சந்திரா தாயாரின் ரத்தத்தைத் துடைத்து தத்கால சாந்தியான சிகிச்சை செய்கிறாள். தன் பிதாவின் மனத்தை நோகச் செய்ததினால் தான் இம்மாதிரி விபத்து வந்தது என்று விசனிக்கின்றாள். நாராயணன் அருகிலும் வரவில்லை.

மறு தினம் காலையில் ஆஸ்பத்திரியில் கொண்டு காட்டியதில் சப்பையில் பலமாக அடிபட்டுவிட்டதால் ஆஸ்பத்திரியிலேயே இருந்தால்தான் சரியானபடி சிகிச்சை செய்ய முடியும். பல்லிலும் பலத்த அடி பட்டதனுல் பல் ஆடிவிட்டது. அது சீழ் பிடிக்காமலிருந்தால் தேவலை. பிடித்துவிட்டால் பல்லைப் பிடுங்கி விடவேண்டும்.'' என்றும் வைத்தியர் கூறிவிட்டார். இனி என்ன செய்வது? ஆஸ்பத்திரியிலேயே தர்ம வார்டில் விட்டுவிட்டார்கள்.

சந்திரா வீட்டில் ஒண்டியாக அகப்பட்டுக் கொண்டு படும் துன்பமோ சொல்ல முடியாது. ஆஸ்பத்திரிக்கு தினம் சென்று தாயாரைப் பார்த்து வருவதும் வீட்டை கவனிப்பதும் சந்திராவின் பொறுப்பாகிவிட்டதால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் "ஏண்டியம்மா ஒண்டியா என்ன சேறெ. சேத்துலே செந்தாமரை பூத்தாப்பலே நீ அந்த மூர்க்கத்தின் வயித்தில் பிறந்தே! புருஷனுக்கு மனம் நோக நடந்ததால்தான் இம்மாதிரி வந்தது. வீட்டை விட்டு வேறு மனிதருடன் கோயிலுக்குப் போவது என்ன நியாயம். புதுப் புடவையின் மகத்துவம் போய்விட்டாள்! இப்படி வந்துவிட்டது.'' என்று சொட்டுச் சொல்வது சந்திராவுக்குத் தலை நோயாகிவிட்டது.

சீதாவுக்குப் பல்லில் சீழ் பிடித்துவிட்டதால் அப் பல்லை எடுத்துவிட்டார்கள். ஒன்றன்பின் ஒன்ருய் எல்லா பற்களுக்கும் ஊனம் ஏற்பட்டதால் எல்லாப் பல்லையும் ஒன்று விடாது எடுத்து வாயை சரியான மணிபர்ஸாகச் செய்துவிட்டார்கள். சீதாவின் வருத்தம் தினே தினே அதிகரித்துக்கொண்டே வந்தது. தான் செய்த காரியம் மிகவும் தப்பிதமானது. அதனுல்தான் தனக்குக் கடவுள் இத்தகைய தண்டனை கொடுத்துவிட்டார் என்பதைச் சற்று தானே உணர வாரம்பித்தாள்.

பால் விஷமாகிய பிறகு பாலைப்பற்றி எண்ணி என்ன லாபம். தான் இத்தனை துணிகரமாகச் செய்த காரியத்திற்காக தன் புருஷன் ஒன்றுமே பேசாமலிருப்பதானது அவருடைய கோபத்தைக் காட்டுகின்றதே யன்றி வேறில்லை என்பதையும் உணர்ந்தாள்.

நாராயணனுக்குள்ள வேதனையுடன் இம்மாதிரி ஓர் விபத்து வந்துவிட்டதால் எங்கே சப்பை உடைந்து அசல் மொண்டியாகி விடுவாளோ! இத்தனை குழந்தைகளையும் வைத்துக்கொண்டு எவ்விதம் காலந் தள்ளுவது என்ற ஏக்கமும் பிடித்துக்கொண்டு பித்தன் போலத் தவிக்கும் நிலைமையில் இருக்கையில் நாம் முன்பு சொல்லிய படி தந்தி வந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

அந்தோ! பரிதாபம். பரிதாபம்! பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பது போல இந்த விபரீதமான ஆபத்து விஷயத்தைக் கேட்ட நாராயணனுக்கு ப்ரக்ஞையே அற்று விட்டதென்று கூறலாம். மூர்ச்சையாகி விழுந்துவிட்டான். "என்னிடம் சண்டையிட்டு 300 ரூபாயை வாங்கிச் சென்றும் கடைசியில் இப்படியா கொள்ளை போய்விடவேண்டும். அட க்ரகசாரமே!'' என்று புழுவாகத் துடிக்கின்றான்.

இங்கிருந்து புனவுக்குச் சென்று கிழவியை அழைத்து வருவதென்றால் சாமான்யமாகவா இருக்கிறது. குறைந்தது 50 ரூபாய் உண்டானால் தான் அக் காரியம் நடைபெறும். ஆஸ்பத்திரியிலுள்ள மனைவியைக் கவனிப்பதா! வீட்டிலுள்ள குழந்தைகளைப் பார்ப்பதா! வெளியூரில் அனாதைப் பிணமாகக் கிடக்கும் தாயாரை அழைத்து வருவதா! அந்தோ! இப்படியும் என்னை சோதனை செய்வது தருமமா! எனக்கு கணக்கற்ற இன்னல்களை மட்டும் காட்டிவிட்டு அதிலிருந்து தேறும் மார்க்கத்தைக் காட்டாம லிருப்பது உன் கருணைக் கழகா! ஜகதீசா! நான் என்ன செய்வேன்?

திடீரென்று 50 ரூபாய் கடன் வாங்க நான் யாரிடம் போவேன்? நேற்று காலையில் வீட்டு வரி கட்டுவதற்குக் கையிலிருந்த ரூபாயையும் கொடுத்துவிட்டேன். மிச்சம் உள்ள ரூபாய் போய்ச் சேருவதற்குத் தானே சரியாக விருக்கும்?'' என்று தாங்கமாட்டாது அலை காற்றில் அகப்பட்ட நிலையற்ற தோணியைப் போலத் தத்தளித்து இடிந்து போய்விட்டான்.

10-வது அதிகாரம்

சந்தோஷக் களிப்பு—சங்கடத் திகைப்பு

வெகு காலங்களாக சந்திக்காமலிருந்த—ஏன் வாழ்க்கையே பாழாகி விட்டதென்று தீர்மானமாய் எண்ணிக் கைவிட்டு விட்ட—காதலர்கள் திடீரென சொப்பனத்தில் புதையல் கிடைத்து அது உண்மையாகவே ஆய் விட்டது போன்று சந்திப்பும், இன்ப ஜோதி ப்ரகாசிப்பது போன்று காதல் வெள்ளத்தில் மூழ்கச் சந்தர்ப்பமும் கிடைத்துவிட்டதை மெல்லிய இளம் மாந்தளிர் போன்ற ஜானகியினுல் நம்பவே முடிய வில்லை; தாங்கவும் முடியவில்லை.

அவள் எங்கே கீழே விழுந்துவிடுவாளோ என்கிற பயத்தினுல் பத்மநாபன் அவளைக் கட்டித் தழுவியபடியே தேறுதல் வார்த்தைகள் கூறி அப்படியே அருகிலிருந்த விசுப் பலகையில் உட்கார்ந்து அவளை விடாது அணைத்தபடியே "ஜானகி! இன்னும் ஏன் உன் உடம்பு நடுங்குகின்றது? ஏன் கண்ணில் நீர் வழிகின்றது?...கண் மணீ! நான் மகா கொடிய இதயத்தையுடைய சண்டாளனுக உன்னை நடத்திவிட்டது உண்மைதான். எனினும் இன்னும் நான் அதே நிலைமையில் இருப்பதாக நினைக்காதே! நல்ல ரோஜா புஷ்பத்தின் அருமையான வாசனையின் மகிமையை அறியாது அதை யோர் காகிதப் புஷ்பமாக எண்ணி அலக்ஷியமாக விருந்த முட்டாளுக்கு ஒப்பாக என் கதியாயிற்று.

என்னுருயிர் ஜானகீ! வருந்தாதே! இனி எனக்குப் புத்தி வந் தது. நான் பழய முட்டாளல்ல...ஏதோ! என்னைப் பாரு...வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லு. உன்னுடைய குயிலினும் இனிய குரலால் ஒரு வார்த்தை சொல்லு. கண்மணீ!...ஜானகி!" என்று

அவள் முகத்தைத் தடவியவாறு கெஞ்சிக் கேட்கிறான். அழகிய சந்திரபிம்பம் போன்ற அவளது முகத்தை இமை கொட்டாது பார்க்கிறான்.

அவன் வாழ் நாளில் என்றும் கண்டறியாத அபூர்வ உணர்ச்சியினால் தாக்கப்பட்டு மெய் மறந்து தம்பித்துப் போய் ஜானகியின் அமுத மொழிக்கே ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டு அவளுடைய பரிசுத்தமான காதல் அன்பில் ஐக்யமாகி விட்டான்.

ஜானகி சில நிமிடங்கள் வரையில் ப்ரமிப்பினால் ப்ரக்ஞையேயற்றவள் போலாகிவிட்டாள் எனினும், பத்மநாபன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் கனவு காண்பது போல செவிகளில் விழுகின்றது. ஆனால் வாய் திறந்து பதில் பேசும் சக்தியே யற்று துவண்டு போய்விட்டாள். பின்னும் சில நிமிடங்கள் சென்ற பிறகே சற்று தெளிவு உண்டாகி மெல்ல தன் தலையை நிமிர்த்தி தன் கணவனின் முகத்தை சில வினாடிகள் பார்த்தாள். கண்ணில் வடியும் கண்ணீரால் அவன் முகம் மறைந்துவிட்டதால் மீண்டும் பதுமை போலச் சாய்ந்தாள். சுமார் அரை மணிக்குப் பிறகு "நான் இப்போது எங்கிருக்கிறேன்? என் கண் முன்பு காண்பதும் செவிகளால் கேட்பதும் உண்மையானதா! அன்றி கனவா!... எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! தலை சுழலுகிறது. மார்பில் ஏதோ செய்கின்றதே! நான் பேசுவது உண்மைத் தோற்றந்தானே!...என்று நாக்குழற குயில் போன்று கூறி மிரள மிரளப் பார்த்தாள்.

பத்ம:—கண்மணீ! என்னின்ப வடிவமே! நீ காண்பது யாவும், கேட்பது அனைத்தும் உண்மையே! இதில் சிறிதும் சந்தேகமே வேண்டாம். கடவுளுக்கு இன்றுதான் என் மீது கருணை பிறந்து நல்ல புத்தியை அளித்தார். இனி நீ பயப்படாதே! ஜானகி! ஜானகி! கண்ணீர் விடாதே.

ஜானகி:—(மெல்ல பேசத் தொடங்கி) என் ப்ராணநாதா! நம்மிருவரையும் பிரித்திருக்கும் கொடிய வரதக்ஷிணையும், சீர்வகைகளுமான பூதங்கள் நம்மை இனி பாதிக்காம லிருக்குமா! நம்முடைய இன்ப வாழ்க்கையை விழுங்காம லிருக்குமா!....உங்கள் பேற்றோரின்

கோபம் தணிந்ததா!...நாதா!...என் மீது சுமத்திய வீண் அபாண்டப் பழிகளை நம்பாது எட்டி உதைத்துத் தள்ளினீர்களா!...நான் குற்ற மற்ற நிரபராதி என்பதைக் கடவுளறிய சத்யம் செய்வதை நம்ப மாட்டீர்களா...

பத்ம:—கண்ணே! இதென்ன இவ்விதம் பேசுகிறாய்! நீ பரிசுத்த வதி என்பதை நான் நம்பாமலா உன்னிடம் மன்னிப்பு கேட்கி றேன். என் முட்டாள்தனத்தை நான் என்றும் அறியாமலிருக்க முடியுமா! நேற்றே நன்கறிந்துவிட்டேன். என் மனம் தவித்த தவிப்பை ஈசன்தான் அறியவேண்டும். என் கண்ணே! நேற்றைய தினம் நீ பாடியபோது ஏதோ தேவ கானம் யாரோ பாடுகிறார்கள் என்று எண்ணி ஆநந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். உன் அபூர்வ சங்கீதம் என்னைப் பற்றி இழுத்து என்னிதயத்தைத் தேடிச் சென்று துளைத்து உன்னைப் பார்க்கும்படியாகத் தூண்டியது.

என் ஆருயிர் ஜானகி! உன்னைப் பார்த்த உடனே நானடைந்த நிலைமையை இப்போது என்னாலேயே விவரிக்கச் சாத்யமில்லை. நீதான் என்பதை ஒருவாறு யூகித்தறிந்தேன். பிறகு இரவு என்னுடைய நண்பன் மூலம் நன்றாகத் தெரிந்துகொண்டேன். இரவு முற்றும் பித்தன் போன்று தத்தளித்தேன். நேரே உன் வீட்டிற்கே வந்து உன்னைக் கண்டு என் முட்டாள்தனத்தைக் கூறி மனச்சாந்தி பெற லாமா என்று எண்ணினேன். எனினும் இதற்குள் அத்தனை ஆத் திரப்படலாகாது என்று என்னையே நான் மெல்ல தேற்றிக்கொண்டு என் சிநேகிதனின் மனைவியின் மூலமே உன்னைப் பார்க்க ஏற்பாடு செய்தேன்.

ஜானகி:—நாதா!....வாஸ்தவந்தான். நீங்கள் விரும்பினீர்கள்; நாம் சந்தித்துவிட்டோம். உங்கள் பெற்றோர்கள் இதை யறிந்தால் என்ன செய்வது? அவர்கள் கோபிக்கமாட்டார்களா! நீங்கள் கூறுவ திலிருந்து அவர்களுக்குத் தெரியாமல் சந்தித்திருப்பதாக வன்றோ தெரிகின்றது. நமது கஷ்டம் வடிவது போலத் தோன்றி பின்னர் ஏதாவது விபரீதமாகிவிட்டால் என்ன செய்வேன்...

பத்ம:—காதல் கனியே! ஜானகி! நீ யோசிப்பதும் கேட்பதும் மிகவும் சரியானதே யாகும். எனினும் இனிமேல் அம்மாதிரியான பிரிவு ஒருபோதும் ஏற்படாது என்பதை நான் கடவுள் மீது ஆணை யாகச் சொல்கிறேன். கண்மணீ! என் பெற்றோர்களுக்குத் தெரி யாது என்பது உண்மையே! அவர்களை விரோதித்துக்கொண்டு சந் தோஷமாக விருப்பது அத்தனை அழகல்ல. அவர்களையும் திருப்தி செய்துவிட்டு, நாம் சந்தோஷமாக இருக்கும் வழியையே

நான் தீர்மானமாகத் தேட நினைத்துள்ளேன். அதுவரையில் நமது இந்த இன்பகரமான சந்திப்பு நமக்குள் மட்டும் ரகஸியமாகவே இருக்க நான் விரும்புகிறேன்.

ஜானகி:—தங்களிஷ்டத்திற்கு மாறாக இப் பேதை எதுவும் சொல்லப் போவதில்லை. ஆனால் சதா என்னைப் பற்றியே கவலையுற்று கலங்கித் தவிக்கும் என் பெற்றோர்களுக்கு மட்டும் இச் செய்தி தெரிந்தால் அவர்கள் அளப்பரிய சந்தோஷத்தை யடைவார்களே! அவர்களுக்கு மட்டும் தெரிவிக்க உத்திரவிடுவீர்களா—என்று தன் மனப் பூர்வமான அன்பைக் காட்டி, கெஞ்சிக் கேட்டபடியே தன் கணவன் மீது சாய்ந்து அவன் மார்பைத் தடவினாள்.

பத்ம:—கண்ணே! உன் பெற்றோரின் நிலைமையை நீ கூற வேண்டுமா! எல்லாவற்றையும் நான் இப்பொழுதே அறிந்தேன். நேற்றிரவு உன்னுடைய நினைவால் பித்தன்போல நான் சென்றுகொண்டிருக்கும்பொழுது உன்னுடைய பிதா எங்கோ சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பும்பொழுது பார்த்தேன். தேகம் குச்சிபோல மெலிந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். என்ன செய்வேன்?

ஜானகி! நீ சொல்வதுபோல நாம் இப்போது இவ் விஷயத்தைத் தெரிவித்துவிட்டால் அதில் நமக்கு ப்ரதிகூலமேயன்றி அனுகூலம் கிடையாது. ஏனெனில் என் பெற்றோரின் மூர்க்கத்தனத்தின் எல்லை நீ யறியாததல்ல. இந்த சந்தோஷச் செய்தியை உன் பெற்றோரறிந்தால் அது எப்படியாவது வெளியில் தெரிந்துவிடும். அது உடனே என் பெற்றோருக்கு எட்டிவிடும். பிறகு நெருப்பில்லாமலேயே பற்றிக்கொள்ளும். அதன் பயனாக நம்மிருவரில் யாரையாவது உலகத்தைவிட்டு மறையும்படியும் செய்து, உன் பெற்றோரின் குடும்பத்தையும் சிதறவடித்துவிடுவார்கள். என் தந்தையின் ஒன்றுவிட்ட தம்பி ஒரு மந்திரவாதி இருக்கிறார். அவரைவிட்டு ஏதாவது செய்துவிடப்போகிறார்களே என்கிற பயம் எனக்கு எப்போதும் உண்டு. ஆகையினால் கண்ணே! நீ சற்று பொறுக்கவேண்டும். நான் உன்னை இனி கனவிலும் கலங்கவிடமாட்டேன். இது சத்தியம். இதை நீ நம்பு. ஒரு சமயம் புத்தி கெட்டு ஒரு முட்டாள்தனம் செய்துவிட்டால் அதேபோல எப்போதும் செய்வேனா! என் இன்பக் கிளியே! நீ சந்தேகப்படாதே!

ஜானகி:—நாதா! தங்கள் சித்தப்படியே செய்யுங்கள். என் வாழ்நாளின் இன்பகரமான முடிவு நான்கு வருடத்திற்கு முன்பு நடந்த தீபாவளியுடன் முடிந்துவிட்டதாக எண்ணி அதே ஏக்கத்தில் இரவு பகல் என் கண்ணில் வடிந்த நீரை கடலுக்கும் ஒப்பிட

லாம். இருள் மூடி, வாழ்வே அந்தகாரமாகிவிட்ட எனக்கு கடவுள் கிருபையினுல் வெளிச்சம் உண்டாகி இருக்கையில் அதைக் கெடுத்துக்கொள்ள நான் விரும்புவேனு! அப்பப்ப! நினைத்தாலும் என் சரீரம் நடுங்குகின்றது.

நாதா! இன்னும் சில காலம் பார்த்துவிட்டு இப் பாழும் உயிரை மாய்த்துக்கொள்வதென்றே தீர்மானித்துவிட்டேன். பிறவிக் குருடனுக்கு திடீரென்று கண் தெரிந்ததுபோலும், மலடிக்கோர் ஆண்மகவு பிறந்ததுபோலும் எனக்கு இன்று இத்தகைய தரிசனம் கிடைக்கப்போகிறதென்று நான் கனவிலும் கருதவில்லை. இதை கடவுள் என்னுயுள் உள்ள பரியந்தம் நிலைக்கச்செய்தால் போதும்.

பத்ம :—கண்மணீ! நீ எத்தகைய நிலைமையில் இருந்தாய், எவ்விதம் புழுகெனத் துடித்தாய் என்பதை மகா கொடிய மனத்தையுடைய நான் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இத்தனை நாளாக அறியாவிடினும், ஏன்! மனத்தினுல்கூட சிந்திக்காத மகா பாதகனுக இருந்தபோதிலும் நேற்றிரவே உன் சினேகிதைக்கு நீ எழுதிய கடிதத்தைப் படித்ததும் அறிந்துகொண்டேன். கண்மணீ! என் மீது கட்டாயம் உனக்குக் கோபமோ, வெறுப்போ இருக்குமல்லவா!

ஜான :—இது ஒரு சோதனையான கேள்வியா! நாதா! தங்கள் மீது நான் எதற்காக வெறுப்படைவேன்? கோபிப்பேன்? என்னுடைய தலைவிதியின் ஆட்சியில் நான் எத்தனை நாளைக்கு கண்ணிருந்தும் குருடியாக இருக்கவேண்டுமோ அத்தனை நாளைக்கு அந்த துன்பத்தை யனுபவித்துத்தானே தீரவேண்டும். என் விதியைத்தான் நான் பலகாலும் நொந்துகொண்டு வருந்தியதுண்டு. என் விதியை நோவதைவிட்டுப் பிறரைக் குறை கூறுவதில் பயனென்ன?

பத்ம :—கண்மணீ!......உன்னுடைய பொறுமையைக் காணக் காண உன்னை இம்மாதிரி வருத்திவிட்டோமே என்று என் மனம் புண்ணுகிறது. இதற்கு நான் இனி எத்தனை வருந்தினுல்தான் தீரும்? நீ பட்ட கஷ்டங்களுக்கு ஈடாகும்? எல்லாம் நல்லதிற்கு என்ற கதையைப்போல எனக்குப் பரீக்ஷை தவறிவிடவும், அதுகாரணமாக நான் வியாகூலப்படவும், என் சினேகிதன் வந்து என்னை அழைத்து வரவும், வந்த விடத்தில் உன்னைச் சந்திக்கவும் நேர்ந்த ஆச்சரியம் என்னுல் கண்டுபிடிக்கவே முடியவில்லை. எல்லாம் ஈசனின் செயல். ஜானகி! நீ எப்படி கனவிலும் கருதவில்லையோ அப்படியே நானும் மனத்தில் நினைக்கவே இல்லை.

ஜானகி :—நாதா! நாம் இன்று ஒரு தினம் ரகஸியமாகச் சந்தித்துவிட்டால் இது போதுமா? பஹிரங்கமாக நாம் என்றும் பிரியாமலிருப்பதற்கு என்ன உபாயம் செய்யப்போகிறீர்கள்? இனி நான் தனிமையில் அரை விநாடிகூட இருக்கமுடியாது. தங்களது பாதத்தை விட்டுப் பிரியவேமாட்டேன். இதற்கு என்ன வழி சொல்கிறீர்கள்?

பத்ம:— என் ஆருயிர்க் கண்மணீ! இனி நீ இருப்பதுபற்றி கூறுவதற்கு முன்பு என்னால் இருக்கமுடியுமென்று நினைக்கின்றாயா! அம்மாதிரி எண்ணாதே! இனி நான் பழய முட்டாளல்ல. பசையற்ற இதயத்தையுடைய பாவியல்ல. தக்க முறையில் உபாயம் செய்து பெற்றோர்களையும் விரோதித்துக்கொள்ளாமல் நாமும் சந்தோஷமடையும் வழியையே செய்யப்போகிறேன். முன்னறி தெய்வங்களாகிய அவர்களை விரோதித்துக் கொள்வதாயின் இன்றே அதைச் செய்து விடலாம். அவர்கள் மனம் நோகச்செய்வது தருமமல்ல. அவர்கள் அக்ரமம் செய்தபோதிலும் அதையும் சரியான வழியில் திருத்திவிடுவதுதான் முக்கிய லக்ஷணமாகும். தாங்கள் செய்துவிட்ட தவறுதலைத் தாங்களே அறிந்துகொண்டு வருந்தவேண்டும்.

என் அன்பின் அமுதமே! கண்மணீ! நீ இத்தனை யுகங்கள் பொறுமையுடன் இருந்ததுபோல இன்னும் கொஞ்சநாட்களுக்கு அப் பொறுமையை இழக்காது வகித்திரு. நான் எத்தனை விரைவில் உன்னை அழைத்துச் செல்லக்கூடுமோ அத்தனை விரைவில் அழைத்துக் கொள்கிறேன். என்ன யோசிக்கிறாய்! கண்ணே இதோ பாரு! கண்ணீர் விடாதே!...

ஜானகி:— நல்ல உயர்ந்த கனியைக் கண்ணாலேயே பார்க்காமலிருந்துவிட்டால் அதைப் பற்றி விசாரமே தோன்றாது. அது நமக்குச் சொந்தமானது அதன் சுவையை இனி அனுபவிக்கலாம் என்ற ஆசையைக் காட்டிவிட்டு உடனே அதைப் பார்க்கக் கூடாதென்று பிடுங்கி வைத்துக்கொண்டால் மனம் நிம்மதியாகுமா! அதுபோன்றல்லவோ என் நிலைமையாகிவிட்டது. தாங்கள் அதுவரையில் இவ்விடம் வரவேமாட்டீர்களா! கடிதமாவது எழுதிக் கொள்ளலாமா! அதுவுங் கூடாதோ!

பத்ம:— ப்ரிய ஜானகி! நான் வராமலும், உன்னைச் சந்திக்காமலும் இருக்கவேமாட்டேன். ஏதாவதொரு சாக்கை வைத்துக் கொண்டு நான் அடிக்கடி உன்னை வந்து சந்திப்பேன். கண்மணீ! கடிதமே எழுதவேண்டாம். அதனால் நமக்கு பெருந் தீங்கு நேரும். நம் போதாக் காலக்கொடுமைக்கு கடிதம் அவர்கள் கையில் அகப்பட்டு விட்டால் அதோடு நாம் அதோகதியாகத்தான் போய்விடுவோம். ஆதலால் நீ தயவு செய்து அந்த ஆசையையும் சற்று

பொறுத்துக்கொள்ளு. என் கண்ணே! உன்னுடைய ஆவலை நானறிய மாட்டேனு! என்ன செய்வது? வேளையின் கொடுமை.

ஜான :—தாங்கள் எப்பொழுது வருவீர்கள்? எப்படி உங்கள் பெற்றோருக்குச் சொல்லிவிட்டு வருவீர்கள். அம்மாதிரி வராமலும் இருந்துவிட்டால் நான் என்ன செய்வேன்?

பத்ம :—அந்த கவலையே வேண்டாம். நான் எப்படியாவது வந்து உன்னைப் பார்த்துச் செல்வேன். பயப்படாதே! இனிமேல் கவலை என்பதே வேண்டாம். இன்றோடு நமது கஷ்டம் நிவர்த்தியாகி விட்டதாக திடமாய் நம்பு—என்று வெகு அன்புடனும், ஆர்வத்துடனும் கூறித் தேற்றி, அவனது காதல் கனிந்த முத்தாரங்களைப் பல முறை சூட்டிக் களித்தான்.

வெகு நாட்களாகப் பிரிந்து அல்லும் பகலும் அனவரதமும் ஏங்கித் தவித்திருந்த ஜானகியின் இதயக் களிப்பிற்கு ஈடு கூறவே திறமன்று. நேரம் செல்வதே தெரியாமல் காதலர் இருவரும் புத்துயிர் பெற்று புனிதமான இன்பசாகரத்தில் திளைந்து ஆநந்தப் பதுமை போலானார்கள்.

மணி ஏழு அடித்துவிட்டபடியால் சுகந்தவல்லியும் ரங்கநாதனும் வீதிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த சந்தடியைக் கூட அவர்கள் கவனியாது தங்களுடைய ஆநந்தகரமான நேரத்தைக் கடத்திக்கொண்டிருந்தார்கள். பிரிந்தவர்கள் கூடினால் பேசவுங் கூடுமோ என்பது போன்று காதலரிருவரும் கருத்தொருமித்துக் களிப்புடனிருக்கையில் நாம் தடையாக அழைப்பது சரியல்ல. அவர்கள் சந்தோஷமாக இருந்தால் அதுவே நம்முடைய பேரானந்தம் என்று எண்ணி சுகந்தமும் ரங்கனும் பேசாது, சந்தடிசெய்யாது இருந்துவிட்டார்கள்.

பத்மநாபன் அகஸ்மாத்தாக மேஜைமீதுள்ள கடியாரத்தைப் பார்த்தான். மணி ஏழரைக்குமேலாகி இருந்தது கண்டு திடுக்கிட்டான். "ஜானகி! மணியைப் பார்த்தாயா! 7 மணி வரையில் தான் உனக்கு நேரம் கூறி மன்னி அழைத்துவந்தார்கள். மேற்கொண்டு அரைமணியாகிவிட்டதே! அவர்கள் வந்துவிட்டார்களோ இல்லையோ அதையும் கவனிக்கவில்லை. நேரம் செல்வதே தெரியாமல் சென்றுவிட்டதே! இப்போதுதான் நீ வந்ததுபோன்றிருக்கிறது; இதற்குள் பாழும் மணி ஏழரையாகிவிட்டதே! உன் வீட்டிலிருந்து யாராவது தேடிக்கொண்டு வந்துவிட்டால் ஆபத்தாக முடியுமே!...என்று இழுத்தார்ப்போலக் கூறினன்.

ஜானகி :—ஆ! ஏழடித்துவிட்டதா! ஐயோ!...நான் தங்களைப் பிரிந்து செல்லவேண்டுமே! தாங்கள் இங்கு இன்னும் எத்தனை நாள் இருப்பீர்கள்?

பத்ம :—கண்ணே! இன்னும் மூன்று நாட்கள்தானிருப்பேன். இந்த மூன்று தினங்களும் நீ ஏதாவதொரு சாக்குக் கூறிவிட்டு இங்கு வருகிறாயா!

ஜானகி :—கரும்பு தின்பதற்குக் கூலி கொடுக்கவேண்டுமா! என்னுருயிர் இன்ப துரையைக் காணவருவதற்கு ஓர் உபாயம் செய்யாமலா இருப்பேன்......ஆம்! ஆம்! இப்படிச் செய்தால் பொருத்தமாக விருக்கும். நாளைய தினம் உங்கள் நண்பர் எங்கோ ஊருக்கு திடீரென்று சென்றுவிட்டதாயும் சுகந்தாவுக்குத் துணையிருக்க என்னையனுப்பவேண்டும் என்று சுகந்தவல்லியை விட்டு என் தாயாரைக் கேட்கச்சொல்லப்போகிறேன். சுகந்தவல்லியிடம் என் பெற்றோருக்கு அதிகமான மதிப்பும் நம்பிக்கையும் உண்டு; ஆகையினுல் என் பெற்றோர்கள் ஒன்றும் ஆக்ஷேபனை செய்யாது அனுப்பி விடுவார்கள். நான் நாளை முற்றும் இங்கேயே இருந்துவிடுகிறேன்.

பத்ம :—பேஷ்! இம்மாதிரியே செய்வது உசிதந்தான். நேரமாகிவிட்டது...அதோ விளக்கெரிகிறது பாரு. அவர்களும் வந்துவிட்டார்கள்...கண்மணி! நாளை வெகு விரைவிலேயே உன்னை எதிர் பார்ப்பேன்—என்று கூறி ஜானகியைக் கட்டியணைத்து............

ஜானகியும் வெகு சந்தோஷத்துடன் "நாதா! நம்முடைய இந்த சந்தோஷத்திற்கு முக்கிய காரணமும், புருஷகாரியும் நமது அருமை நேசர்களே யாவார்களன்றோ! இம்மாதிரி நேசர்கள் உலகத்தில் எல்லோருக்கும் கிடைத்துவிட்டால் கவலையே இருக்காதல்லவா! ...அடாடா! இக்கடிகாரமென்ன இப்படி வேகமாக ஓடி நம்மை மிரட்டுகின்றது...நான் வரட்டுமா!...என்று கூறி விடை பெற்றுக் கொண்டு இயற்கையாயுள்ள லஜ்ஜையும், பயமும் பாதித்தவாறு தலைகுனிந்த வண்ணமே வெளியில் வந்தாள்.

வெளியே கூடத்தில் நின்றிருந்த தம்பதிகள் ஜானகியின் ப்ரஸன்னமானதும் அன்றலர்ந்த தாமரையைப் போன்றுள்ள முகத்தைப் பார்த்துப் பூரித்துப் போனார்கள். சுகந்தவல்லி ஜானகியை சேர்த்துக் கட்டியணைத்து சில விநாடிகள் முகத்தோடு முகம் பதித்து ஆநந்தக் கண்ணீர் விட்டு "என்னுருயிர் ஜானகி! உன்னை இன்னிலைமையில் பார்க்கப் போகிறேன் என்று நான் நேற்றிரவு வரையில் கனவிலும் கருதவில்லை. எதிர்பாராத இன்பஜோதி உன் மீது வீசியது கடவுளின் அபூர்வச் செய்கைகளின் விசித்திரமாகும். இம்மாதிரி உன்னை என்று காண்பேன் என்று ஏங்கித் தவித்தேன். இன்றே கடவுளின் கருணை பொங்கியது" என்றாள்.

ரங்கநாதனும் அவ்வாறே பத்மநாபனைக் கட்டியணைத்து தடவிக் கொடுத்து தன் மனப்பூர்வமான ஆநந்தத்தைத் தெரிவித்தான். ஜானகி என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் மகிழ்ச்சி

மயமாக நின்றுவிட்டாள். பத்மநாபன் சந்தோஷத்துடன் "ரங்கநாதா! உண்மைத் தோழர்கள் எம்மாதிரி நடப்பார்கள் என்பதை நீங்களிருவரும் நன்கு காட்டிவிட்டீர்கள். உங்கள் அன்பு நிறைந்த ஆதரவு இல்லையெனின் நாங்கள் இந்த சந்தோஷத்தை ஒருபோதும் அடைந்திருக்கவே முடியாது. ரங்கநாதா! உன்னை விட மன்னிக்குத்தான் நாங்களிருவரும் வந்தனங்கள் செலுத்த வேண்டும்." என்றான்.

ஜானகி பேசாமடந்தைபோலானாள். சுகந்தவல்லி ஜானகியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குக் கொண்டு விட்டு அவள் தாயாரிடம் "மாமி! வழியில் மோட்டார் டயர் பங்சராகிவிட்டது. அதனால் ஒரு மணி நேரம் வீணாகக் காலதாமதமாகிவிட்டது. நீங்களும் மாமாவும் மன்னிக்கவேண்டும். ஜானகியின் வாழ்நாளில் இன்று அவள் அனுபவித்த சங்கீதத்தின் ஆநந்தமும் மகிழ்ச்சியும் இதுவரையில் ஒரு நாள்கூட அவள் அனுபவித்தே இருக்கமாட்டாள். ஏதோ நீங்கள் தயவு செய்ததால் இன்று சில மணி நேரங்களாவது குழந்தை கவலையற்று ஆநந்தமாக இருந்தாள். கடவுள் கிருபையால் என்றுமே அவள் ஆநந்தமாயும் சந்தோஷமாயும் இருக்கவேண்டும்" என்று தந்திரமாகக் கூறிவிட்டு உத்திரவு பெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

சுகந்தாவிடம் ஜானகி மறு நாளைக்கான உபாயத்தை வரும் பொழுது வழியிலேயே தெரிவித்துவிட்டதால் சுகந்தா அதற்கிசைந்து அப்படியே செய்வதாகக் கூறினாள். அன்றிரவு முற்றும் காதலரிருவருக்கும் நித்திரை என்பதே வரவில்லை. அன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளிலேயே மனம் லயித்துப்போய் அதே காட்சிகள் கண் முன்பு தாண்டவமாட ஏதேதோ எண்ணியவாறு இரவைக் கழித்தார்கள்.

மறுதினம் பிற்பகல் நேரத்தைக் காதலர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். சுகந்தவல்லி மூன்று மணி சுமாருக்கு ஜானகியின் வீட்டிற்குச் சென்று முன்தினத்தின் ஏற்பாடு போல ஜானகியின் தாயாரிடம் கூறிக் கேட்டாள்.

ருக்மிணி:—சுகந்தா! உன் வீட்டிற்கனுப்ப ஒருவிதமான ஆக்ஷேபணையும் எங்களுக்குக் கிடையவே கிடையாது; எனினும் ஜானகியின் நிலைமையில் அவளை இராக்காலத்தில் வீடுவிட்டு வீடு அனுப்புவது வீண்வம்புக்கு இடமாகும்; ஆகையினால் நீ இங்கு வந்துவிடு. உன் புருஷன் ஊரிலிருந்து வருமளவும் நீ இங்கேயே இருந்துவிட்டுப் போகலாம்.

சுகந்:—நானே அம்மாதிரி செய்யலாமாவென்று நினைத்ததுண்டு. வீட்டை பூட்டிக்கொண்டு வருவதென்பது இக்காலத்[illegible] சரியில்லை பாருங்கள். வீட்டில் நமக்குள்ள பொருள் ஏ[illegible]

உள்ளதும் போய்விட்டால் என்ன செய்வது? அதற்காகத்தான் பார்க்கிறேன். என் வீட்டில் வேறு யாருமில்லை. வேலைக்காரியுடன் இரண்டு நாய்களும் தகுந்த காவலிருக்கின்றன. இன்றுமட்டும் அனுப்ப முடியுமானால் அனுப்புங்கள். இல்லையேல் வேண்டாம்'' என்றாள்.

ஜானகியின் பாட்டி வெறுப்புடன் "ஆமாம். வெளியிலனுப் பாமல் சிறையில் வைத்திருப்பதுபோல வைத்திருக்கையில் சொல் லாமலிருக்கிறார்களா! அவள் விதி இது. குழந்தை போதுபோக் காக இருக்கட்டும். அம்மா! சுகந்தம்! நானும் வந்து துணை படுத்துக் கொள்கிறேன். ஜானகியையும் அழைத்துச்செல்லு. எனக்குக் கண்வலி உபத்திரவமாகவிருக்கிறது. ஒரு இருட்டு மூலையில் நான் விழுந்து கிடக்கிறேன். கோட்டான்போல நானும் கூடப்போனால் யார் என்ன சொல்வது. நீயும் எனக்கொரு பேத்திமாதிரிதான். உனக்கும் நான் பாட்டிபோலத்தான். ஆகையினால் இப்போதே ஜானகியை அழைத்துச்செல்லு; நான் 8 மணிக்கு வருகிறேன்'' என்றாள்.

இதற்குமேல் என்ன அப்பீல் இருக்கிறது? கிழவியும் வரு வது உபத்திரவமாக விருக்குமோ வென்று நினைத்தாள். இருப்பி னும் பாதகமில்லை என்று ஜானகியை அழைத்துக்கொண்டு போய் விவரத்தைத் தெரிவித்தாள். ரங்கநாதன் 7 மணிக்கே சாப்பிட்டு விட்டு தன்னறையில் போய் படுத்துக்கொண்டான். ஜானகியும் சுகந்தமும் ஓர் தனி யறையில் கொம்மாளமாகப் பேசிக் கொண்டி ருந்தார்கள். பத்மநாபன் முதல் நாள் இருந்த அறையிலேயே விளக்கின்றி மூச்சு விடாமலிருந்தான்.

8 மணிக்கு கிழவி வந்துவிட்டாள். கிழவி சமயல்கட்டுப் பக்க மாயுள்ள இருட்டு கூடத்தில் படுத்துக்கொண்டாள். கிழவிக்குக் கண் உபத்திரவ மாகையினால் பேசாமல் தனித்துப் படுத்துவிட் டாள். காதலர்கள் முன் தினம் போலவே எல்லையற்ற சந்தோஷத் துடன் களித்திருக்கையில் 11 மணி சுமாருக்கு "ரங்கநாதா! ரங்க நாதா! பத்மநாபா! பத்மநாபா!'' என்று யாரோ கூவிக் கதவிடித்த சத்தம் கேட்டு ரங்கனும் பத்மநாபனும் தீயை மிதித்தவர்கள் போல அலறினார்கள். ஏனெனில் கதவை இடித்தவர் பத்மநாபனின் தகப்பனார் என்பது அவருடைய குரலால் தெட்டெனத் தெரிந்து கொண்டதோடு ஜன்னல் வழியாகப் பார்த்ததும் உண்மையில் இவ் விருவருக்கும் திகில் பிடித்து குலை நடுக்கம் எடுத்துக்கொண்டது. மயக்கம் வந்துவிடும் போலாகிவிட்டது. பத்மநாபன் திடுக்கிட்டு இடிந்துபோய் தேகம் நடுங்க அசைவற்றுவிட்டான். ரங்கன் [illegible]ன செய்வதென்று தெரியாமல் பதறிப்போய் தம்பம் போலாகி [illegible]டான்.

[illegible]D AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.

M. SULTAN ABDUL KADER,
SULTANIA MEDICAL HALL, (Estd. 1915.)
PORTO-NOVO. S. A., DISTRICT (INDIA.)

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திவான்களுக்கும் ஓர் விண்ணப்பம்
இழந்துபோன பலத்தை ஒரே வேளை லேகியம் சாப்பிட்ட 1-மணி நேரத்தில் கொடுக்கும்.

நண்பர்காள் சுல்தானியா மேடல் பெற்ற

சிட்டுக்குருவி சத்தின் லேகியத்தை

வாங்கி சாப்பிட்டு குணத்தைக்கண்டு மேன்மேலும் ஆர்டர் கொடுத்தும் இக்கம்பெனி முன்னேற்றத்திற்கு வரும்படிச் செய்ய வினயமாய் கேட்டுக் கொள்கிறேன். வஸ்ஸலாம்.

அவனியாரே! பர்மா கவர்னரின் டாக்டர் சர்டிபிகேட்! கவனிப்பீரே!

"நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுல்தானியா வைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுக்குருவி சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப் பார்த்தேன். அது தேக வலுவையும், வீரிய விர்த்தியையும், தாதுபுஷ்டியையும் கொடுக்கிறது. இன்னும் இந்த லேகியத்தில் அநேக குணங்களிருக்கின்றன."

டாக்டர் சையத் மேஜர் அலிகான் சாயபு,
கவர்னரின் மாளிகை, பர்மா. 20—12—24

கொழும்பு போலீஸ் மாஜிஸ்டிரேட் மகாகனம் பொருந்திய H.P. கப்மான்ஸ் அவர்களால், 1—12—1927ல் 864நெ. ரிப்போர்ட் சிலோன் கவர்ன்மெண்டு அன்லிஸ்ட் (மருந்து பரிசோதக அதிகாரி) மகாகனம் பொருந்திய C. T. சைமன்ஸ் அவர்களுக்கு அனுப்பி 13-12-1927ல் பரிசோதனை செய்தது ரிப்போர்ட்டு நெ. 880. 12-12-1927)

லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழு வகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு வீரிய நஷ்டம், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம், பித்தாதிக்க உஷ்ண வாய்வு. கிருமிரோகம், துர்நீர் வியாதிகள், தேகத்தில் ஓடித் திரியும் பலவகை வாய்வு ரோகம், பார்ச வாய்வு, நெஞ்சுவலி விரைவாதம், கை காலசதி, மறதி, மனோசக்தி நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமப்படுத்தி இரத்தத்தை விருத்தி செய்து, புத்தி சாதுர்யத்தைக் கொடுத்து தேகத்துக்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். ஒரு முறை பரீக்ஷை செய்து பார்க்கவும்.

40 நாள் சாப்பிடும் டப்பி	ரூ: 12 0	20 நாள் சாப்பிடும் டப்பி	ரூ. 5 8
12 நாள் பரீக்ஷை செய்ய	ரூ. 3 8	8 நாள் 16 வேளை டப்பி	ரூ. 1 8
4 நாள் 8 வேளை	ரூ- 0 12	வி. பி, சார்ஜ் பிரத்தியேகம்	

M. சுல்தான் அப்துல் காதர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை தென்னாற்காடு
ஜில்லா. (இந்தியா)

ஏஜண்டு:—
S. E. காதர் முகியதீன்
நெ. 39, ஓல்டு புட்ச்சர் ஸ்டிரீட்
கொழும்பு, சிலோன்.

ஆர்டர் செய்யும்போது இந்த சஞ்சிகையைக் குறித்து எழுதவும்

ஏஜண்டுகள் தேவை

ஒவ்வொரு ஊரிலும் எமது 'ஜகன்மோகினி'யை விற்பனே செய்ய செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு உடனே எழுதவும்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

"வர்த்தக ஊழியன்"

வர்த்தக முன்னேற்றத்தை கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை

இந்தியா, இலங்கை, பினங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலுள்ள பிரபல வர்த்தகர்களாலும், மற்றும் பல பொது மக்களாலும் உலகத்தில் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு, பிரதி ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பல ஆயிரக் கணக்கான இதழ்களுடன் வெளி வருவது.

வர்த்தக ஊழியனில்

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத கட்டுரைகள், சாமான்களுக்கு ரெயில்வே கட்டணங்கள், வர்த்தகத் துணுக்குகள், அன்னிய நாட்டு வர்த்தக விஷயங்கள், தொழில் அபிவிருத்தி, வர்த்தகக்குறி வழக்கு முதலிய பலபல விஷயங்கள் வெளிவரும். மதிப்புரைக்காக பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வர்த்தக ஊழியனில்.

விளம்பரம் செய்வதினால தக்க லாபத்தை அடையலாமென்பது திண்ணம். குறைந்த செலவில் நிறைந்த லாபத்தையடைய விரும்பினால், வர்த்தக ஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்

சந்தா { உள்நாட்டிற்கு ரூ 1-0-0
வெளிநாட்டிற்கு ,, 1-8-0

மானேஜர் வர்த்தக ஊழியன், திருச்சினாப்பள்ளி.

நீங்கள் இதைப் படித்ததுண்டா?

குறைந்த சந்தா! நிறைந்த செய்தி!

"சித்தன்"

ஓர் உயரிய, நவீன மாதப்பத்திரிகை.

ஆசிரியர் டாக்டர் C. P. சாமி.

இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதாரம், வைத்தியம் முதலிய விஷயங்களேயும், அறிவு வளர்ச்சிக்கேதுவான பல கட்டுரைகளேயும், இன்பக்கதைகள், உலக அதிசயங்கள், பெரியாரின் ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண்மக்கள் பகுதி, நாடகம் சினிமா இன்னும் பல அரியவிஷயங்கள் பொதிந்து வெளிவருகிறது.

வருட சந்தா அணு 0-8-0 தனிப்பிரதி அணு ஒன்று

மானேஜர், "சித்தன்" பழனி S. I.

பதிமூன்றுவதாண்டுக் கொண்டாட்டம்
50 ரூபாய் பரிசுகள்.

1936ஆ பிப்ரவரிமீ 25உ க்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 15. 10 ரூபாயில் இரண்டு பரிசுகள்.

5 ரூபாயில் மூன்று பரிசுகள்.

மேற்கண்ட பரிசுகள் புத்தகங்களாகவோ, சுத்தக் கதர் உடைகளாகவோ கொடுக்கப்படும்.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25/- முன்பணமனுப்பு கிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்வதுடன் இனி மேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு,நம்மால் பிரசுரிக்கப்படும். எல்லா நாவல்களையும் இனாமாக அனுப்புவோம்.

ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது.

காங்கிரஸ் சரித்திரம்

ஸ்ரீமான் எம். எஸ் சுப்ரமணிய அய்யர் இயற்றியது

சுமார் **80** பக்கங்கள் **1** அணா சுமார் **200** பக்கங்கள் **5** அணா

காங்கிரஸ் கமிட்டியின் புத்தகங்கள்.

இங்கிலீஷ் பதிப்பு (1200 பக்கங்கள்) ரூ. **2-8-0**

தமிழ் பதிப்பு (600 பக்கங்கள்) ரூ. **1-0-0**

அரிய சந்தர்ப்பம்

தேசபக்தி ததும்பும் அற்புதமான நாவல்கள்

ஸாரமதி — ரூ.**1-12-0**

நளினசேகரன் — அணா **8.**

ரூ. 1—12—0 முன்பண மனுப்புவோருக்கு ஸாரமதியுடன் நளினசேகரன் இனாமாக அனுப்பப்படும்

ஜகன்மோகினி கிடைக்கும் இடங்கள்

சென்னையில் தினமணி விற்கும் கடைகளிலும், சுதேசமித்திரன் புத்தகசாலை ரயில்வே ஸ்டால்களிலும், அடியிற் கண்டவர்களிடமும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

புதுச்சேரி.
1. லக்ஷ்மணபிரசாத் கம்பெனி
2. ரா. நாராயணசாமி (தினமணி ஏஜண்டு)

மதுரை.
D. ராதாகிருஷ்ண ராஜா
மேற்கு கோபுரத் தெரு.

திண்டுக்கல்.
K, M. ராமசாமி
(தினமணி ஏஜண்டு)

மாயவரம்.
1. R. நடராஜன்
60 பட்டமங்கலம் தெரு.
2. ஷேக் ஊஸ்மான் சாகிப்
செட்டித் தெரு. சின்னத்தைக்கால்

கொடைவாசல்.
K. V. கோதண்டபாணி பிள்ளை
கடைத் தெரு.

ஈரோடு.
V. சௌந்தரராஜய்யங்கார்
கெரோஸின் டிப்போ
245. லார்டு நேபியர் வீதி

ஜெம்ஷெட்பூர்.
R. K. Ramachandran
43. Kaliani Road, L. town

வேலூர்.
D.K. ராமசேஷய்யர்

தூத்துக்குடி.
1. P. Samuel
Great Cotton Road
2. T. ராமசாமி.

Soctrang
Mr. So. Uthaman
88. Avenue de Daingai

சிங்கப்பூர்
மகமமத் துல்பகீர் கம்பெனி

குலாலம்பூர்
P. சிவகுரு
50. Brickfields Road

சைகான்
C. நாகைய்யா
114 Rue Pellerin

கோயமுத்தூர்
1. International News Agency
Variety Hall Road
2. C. N. Narayanan
Raja street.

ஷண்முகநாதபுரம்
சொ. ராமநாதன்

காரைக்குடி.
T. K. சின்னப்பன்
(தினமணி ஏஜண்டு)

கொழும்பு
A.R. சாமி.
191. நோரிஸ் ரோடு.

திருச்சி
The National Trading Co
Teppakulam

புதுக்கோட்டை
P. V. சுப்ரமண்யம்

தஞ்சாவூர்
N. L. Iyer

கும்பகோணம்
1. K.S. நாராயணசாமி கம்பெனி
மடத்துத் தெரு.
2. காதி வஸ்திராலயம்.
3. S. முத்துசாமி & சன்.
உடையார் பங்களா.

ராசீபுரம்
ராம விலாஸ் லைப்ரெரி.

சாம்பியன் ரீப்
K.C. சீதாராம் & பிரதர்ஸ்

(182984)

ஒரு வருஷ
சஞ்சிகை
இனும்.

மூன்று புதிய
சந்தாதாரர்களைச் சேர்த்து
முன்பணம் அனுப்புவோருக்கு

இனமாக நாவல்கள் வேண்டுமா ?

எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து
முன்பணமனுப்புகிறார்களோ, அத்தனைவது
நம்பர் டங்கிலுள்ள புத்தகங்களில்

ஒன்று
இனம்

பங்கு-1.
நளினசேகரன்
வீரவஸந்தா
3 வைரங்கள்
படாடோபத்தின்
பரிபவம்
பிச்சைக்காரக்
குடும்பம்

பங்கு-2.
பரிமளகேசவன்
உத்தமசீலன்
கதம்பமாலை
சுகந்தபுஷ்பம்

பங்கு-3.
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
சோதனையின்
கொடுமை

பங்கு-4.
தியாகக்கொடி
நவநீதகிருஷ்ணன்
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்
மங்களபாரதி

பங்கு-5.
வைதேகி
பத்மசுந்தரன்

“ஜகன்மோகினி” ஆபீஸ், திருவல்லிக்கேணி.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்!!!

அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.

மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.